விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 31 செவ்வாய்க்கிழமை (17.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## அரசியலமைப்பின் ஊடாக ஈழ நாடு உருவாகும்
### உதய கம்மன்பில குற்றச்சாட்டு



(கொழும்பு) புதிய அரசியல் அமைப்பில் மாகாண முதலமைச்சரின் விருப்பத்துக்கு அமைய ஆளுநரை நியமிக்கும் யோசனை வடக்கு பிரதேசம் ஈழ நாடாக பிரிந்து செல்ல வழி அமைக்கும் எனவும், சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை எனவும் மாறாக, பயங்கரவாதிகளே உள்ளனர் என ஹெல உறுமயவின் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (22-ம் பக்.)

## புதிய அரசியல் அமைப்பு மோசமான கட்டமைப்பு
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இதுவரை இருந்து வந்த ஒற்றையாட்சி அரசியலமைப்புக்களை விட புதிய அரசியலமைப்பு மிக மோசமான கட்டமைப்புக்களை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்த அரசியலமைப்பிற்கு ஆதரவு கோருபவர்கள் தமிழ்த் தேச விரோதிகளாகவே பார்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கந்தர்மடம் மணல்தரை வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 23

### அரசியல் கைதி தொடர்பில்
## யாழ். பல்கலை மாணவர்கள் ஜனாதிபதியுடன் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நாளை மறுதினம் வியாழக்கிழமை சந்திக்கவுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி கடந்த 25 ஆம் திகதியில் இருந்து இன்று வரை உணவு தவிர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் உடல் 23

## மக்களை கோமாளியாக்க சம்பந்தன் முயற்சிக்கின்றார்
### கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சம்பந்தன் ஒரு கோமாளி என மக்கள் நினைத்து விட கூடாது. மக்களைத்தான் கோமாளிகளாக்க சம்பந்தன் முயல்கின்றார். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித் 23



### யாழ். குடாநாடு முழுவதும்
## டெங்கு சோதனை நடவடிக்கை 104 பேருக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு முழுவதிலும் நேற்றைய தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக இருந்த 2ஆயிரத்து 65 பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், டெங்கு தொற்று ஏற்படுவதற்கு ஏதுவாக சுற்றுச்சூழலை வைத்திருந்த 104 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் யாழ். குடாநாடு முழுவதிலும், நேற்றும் இன்றும் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப் 23

## தனிநாடு அமைந்தால் சிறப்பாக இருக்கும்!
### பாரதிராஜா தெரிவிப்பு



(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றி பெற்று தனிநாடு அமைந்திருந்தால், அது தமிழரின் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியாக 23

## பிரதமர் ரணிலிடம் வாக்குமூலம் பெறுக



(கொழும்பு)

திறைசேரி பிணை முறிப்பத்திர மோசடி சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 23

### உணவு தவிர்ப்பில் உள்ள
## தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ளது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ளது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள மூன்று பேரில் இருவருக்கு சிறைச்சாலை வைத்தியர்களால் சேலைன் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

மூன்று அரசியல் கைதிகள் தொடர்பிலும் வைத்தியர்கள் தொடர கண்காணிப்பிலுள்ளதாகவும் அவர கூறியுள்ளார். 23

## முதலமைச்சருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது

(குருமன்காடு)

வடக்கு மாகாண கடற்றொழில் கிராமிய போக்குவரத்து அமைச்சின் முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனால் முதலமைச்சருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிம 24

## முதலமைச்சர் வேட்பாளராக நீதியரசர் ஸ்ரீபவனுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வு பெற்ற நீதியரசர் ஸ்ரீபவனை நிறுத்துவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி முயற்சி செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் ஸ்ரீபவனை தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் 23

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விசேட பிரேரணையை சமர்ப்பிக்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித தாமதமும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், இவ் விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் இன இணக்கத்தை ஏற்படுத்துவதில் வலுவான தடை உருவாகும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்று பாராளுமன்றில் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அப்பிரேரணையில் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரேரணையானது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள் பற்றியதாகும். விடயங்கள் பின்வருமாறு,

(i) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள், தண்டனை விதிக்கப்பட்டவர்களாகவோ, குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவோ அல்லது இன்னமும் [illegible] 23

## டெங்கு காய்ச்சலால் 390 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மழையுடனான வானிலையை அடுத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோயாளர்களின் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் விசேட டெங்கு ஒழிப்புப் பணிகள் முன்னெடுக்கப் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**RAVEENS EMC – KARAVEDDY**

**GRADE 6 ADMISSION - 2018**

ENGLISH MEDIUM

- ONLY Grade 5 Scholars can APPLY.
- Closing Date :- 20/10/2017 Friday
- Admission Test :- 22/10/2017 Sunday
  - 3.30 - 4.30 pm Mathematics
  - 4.45 - 5.45 pm English

021 226 3321

P.Easwaranathan
Director
BSc.(Hons) Agric Dip.in Edu

(சி-032)

வலம்புரி

021 221 7603, 021 567 1532


# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தையா பரராசசிங்கம்

(ஓய்வுபெற்ற லிகிதர் இலங்கை காப்புறுதி கூட்டுதாபனம்)



திதி:-திரயோதசி 17.10.2017

சோகத்தின் சுமையதனை சுமக்கிறோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம் பரிதவித்து வாடுகிறோம்
நேசத்தை மறந்தது ஏன்? எங்கள் அன்பு அப்பாவே!
நீங்கள் நெடுந்தூரம் சென்று ஆண்டுகள் பதினேழு
ஆயிற்றே!
ஆண்டுகள் பதினேழு ஆனபோதிலும் ஆறிடுமோ
எம்துயர் அப்பா!
ஆண்டவன் அடியிலிருந்து ஆசீர்வதியுங்கள்
ஆருயிர் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில்-27.07.1929
விண்ணில்-10.10.2000

"நடராசா வீதி"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:-
ப.ஜெயபதிதரன்
(மகன்)

# பெருமையுடன் பாராட்டுகின்றோம்

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க
பாடசாலை ஆசிரியர் மதிப்பிற்குரிய

**திரு.ம.திசரூபன்** அவர்கள்



அதிபர் சேவை தரம் III பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் சேவையில் இணைந்து (16.10.2017) அன்று முதல் கிளி/புளியம்பொக்கணை நாகேஸ்வரா வித்தியாலயத்திற்கு அதிபராக கடமை யேற்றுள்ளார். இவர் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்களோடு:-பாடசாலைச் சமூகம்
கிளி/இராமநாதபுரம் மேற்கு, அ.த.க பாடசாலை.

(சி-026)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் பஞ்சலிங்கம்



பிறப்பு 23 - 05 - 1960

இறப்பு 13 - 10 - 2017

யாழ்.கரவெட்டி கிழக்கு யார்க்கருவைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பஞ்சலிங்கம் 13.10.2017 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-லச்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயலீலா அவர்களின் அன்புக் கணவரும், சுஜிதா (லண்டன்), அனுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்காதரன், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நதிஷா, நிதேஷ், அன்ரியா, கனிஸ்கா, அஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 18.10.2017 புதன்கிழமையன்று ஜேர்மனியில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:-ஜெயலீலா
004915211825947, 0750718802

தகவல்:-பெறாமகன் பிரியங்கன்

(சி-027)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(ஐயாத்துரை)



கிளி/பூநகரி ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்கள் 16.10.2017 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-ராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தில்லையம்பலம்-பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகனும், மாசிலாமணி அவர்களின் அன்புக் கணவரும், உதயராணி, சோதிமலர் (நோர்வே), குமுதினி (கனடா), பாக்கியநேசன் (லண்டன்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றெக்ஸ்நியூட்டன், சிவநேஸ்வரன் (நோர்வே), சிவநேசன், அமலினி (பிரித்தானியா), சுகிர்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், இரத்தினபூபதி, காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை மற்றும் சிவமலர், பாலசுப்பிரமணியம், மனோன்மணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா, தையல்நாயகி, பங்கயற்செல்வி, தங்கராசா, உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆஞ்சலோ நிரோசாந்தன், சிந்துஜா, ஜதுர்ஷன், றஜீவன், அனோஜன், தனுஜன், மேனுஜன், தர்சிகன், சுஜந்தன், யுகானி, கஜீதரன், கிருஷன், கோகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆசிஷ் அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.10.2017 செவ்வாய்க்கிழமை இன்று பி.ப 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூநகரி கொள்ளுபிட்டி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலங்கேணி,
பூநகரி.

தகவல்:-குடும்பத்தினர்
0770417334

(1042)

## திருமதி நாகம்மா சின்னப்பு



பிறந்த திகதி 10 - 12 - 1937

இறந்த திகதி 14 - 10 - 2017

நாவலடி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சின்னப்பு அவர்கள் 14.10.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமன்-அம்முனி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற காக்கையன்-சின்னப்பெட்டை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு அவர்களின் அன்பு மனைவியும், ரதீஸ்வரி, ரமணி, ராதிகா, அமரர் ரமேஸ், ரஜீந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவராசா, ரவிநாதன், ஞானசேகரம், சுபாஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.10.2017 காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச ஏற்பாடு செய்யுங்கள்

## யாழ்.பல்கலை.மாணவர் ஒன்றியம் ஆளுநரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்து பேசுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.



தமிழ் அரசியல் கைதிகள் மூவர் நேற்றுடன் 22 ஆவது நாளாக ஆபத்தான நிலையிலும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த நிலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை அவரது அலுவலகத்தில் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளில் மூவருடைய வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையிலும் 58 தடவைகள் வவுனியா நீதிமன்றில் திகதியிடப்பட்டு தொடர் விசாரணைக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி திகதியிட்டிருந்த நிலையில் சட்டமா அதிபரால் திடீரென அவர்களது வழக்கு விசாரணைகள் அநுராதபுரம்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டிருந்தன. ஏற்கனவே தம்மை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், வழக்குகள் திடீரென சிங்கள பகுதி நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட நிலையில் விரக்தியடைந்த அரசியல் கைதிகளில் மூவர் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் தற்போது 22 நாட்களை கடந்த நிலையில் அவர்களது உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே அவர்களது கோரிக்கையை, வழக்கு விசாரணைகளை மீளவும் வவுனியா நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரியும் அடுத்து நிபந்தனையற்ற விடுதலையைக் கோரியும் வடக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

எனினும் அந்தப் போராட்டங்கள் தொடர்பில் கவனத்தில் எடுக்காத அரசு, கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற தயார் இல்லை என்பதனை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக அறிவிப்பு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதியும் அரசியல் கைதிகள் தொடர்பில் எந்த முடிவுகளையும் அறிவிக்காது பேச்சுவார்த்தைக்கு வருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் தான் வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்துள்ள மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கோரியிருந்தனர். இந்தச் சந்திப்பின் போது அரசியல்கைதிகளின் கோரிக்கைகளை ஏற்று அவர்களுடைய வழக்கு விசாரணைகளை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரவுள்ளதாகவும் அவர்களுடைய உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தவுள்ளனர். இந்தச் சந்திப்பில் கைதிகளின் உறவினர்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4-9)

# புதிய அரசியலமைப்புச்சபையின் வழிநடத்தல் கூட்டம் 19ம் திகதி

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)



புதிய அரசியலமைப்புச் சபை யின் வழிநடத்தல் குழுவின் விசேட கூட்டம் நாளை மறு தினம் 19ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக, இக்குழுவின் உறுப்பினரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அரசியலமைப்பு சபை வழிநடத்தல் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 30ஆம், 31 ஆம் மற்றும் முதலாம் திகதிகளிலும் நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புச் சபை கூட வுள்ளது.

இதன்போது, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் நகல் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக, மனோ கணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கமைய, இந்த விவாதத்தில் முன்வைக்கப்படும் விடயங்களை அரசியலமைப்பில் உள்ளடக்குவது தொடர்பில், மீண்டும் அரசியலமைப்பு சபை வழிநடத்தல் குழு கூடி ஆராயும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவுடன் ஒப்பந்தம் செய்ய எந்தத் தேவையும் எமக்கில்லை

## ஜே.வி.பியின் தலைவர் அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டி எந்தவொரு தேவையும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிலர் தமது கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக காட்ட முயற்சிக்கின்றனர் எனவும் இதன்போது அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நாமல் எம்.பி உட்பட 8 பேருக்குப்பிணை



பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வெளிநாட்டவர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டு எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 8 பேரும் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதேஅனைவரையும்பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கி ஆளுநராக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் தெரிவு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கியின் ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Global Capital Markets Publication என்ற வெளியீடே தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கியின் ஆளுநராகக் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியை தெரிவு செய்துள்ளது.

வோஷிங்டனில் நடைபெற்ற உலக வங்கி சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டத்தில் கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமியின் இந்த விருது குறித்த அறிவிப்பு இடம்பெற்றதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.



தெற்காசியாவில் சர்வதேச மூலதன சந்தை தொடர்பில் செய்தி, கருத்துக்கள் தரவுகள் தொடர்பில் Global Capital Markets Publication முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 650 சிங்களக் குடும்பங்கள் சலப்பையாற்றில் குடியேற்றம்

(கொழும்பு)

திருகோணமலை- சலப்பையாறு பகுதியில், அநுராதபுர மாவட்டத்திலிருந்து அழைத்துவரப்பட்ட 650 இற்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள், அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டுள்ளன.

சலப்பையாறு பிரதேசம், தமிழ்பேசும் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பகுதியாகும்.

இங்கு யான் ஓயா திட்டம் என்ற போர்வையில், சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கோமரங்கடவெல என்று சிங்களப் பெயர் சூட்டப்பட்டுள்ள, குமரேசன்கடவை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, யான் ஓயாவுக்கு அருகே கல்லப்பத்தை பிரதான வீதியை அண்டியே இந்த சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடனேயே இந்த சிங்களக் குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

650இற்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து அழைத்து வரப்பட்டு இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள், அதிகாரிகளின் துணையுடன் இடம்பெற்றுள்ள இந்தக் குடியேற்றத் திட்டத்தில், நிரந்தர வீடுகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் இனவிகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதனால், திருகோணமலை மாவட்டத்தின் இனவிகிதாசாரம் பெரிதும் மாற்றமடையும் ஆபத்து இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (இ-7)

# பலம் வாய்ந்த அமைப்பாளர்கள் சுதந்திரக் கட்சிக்கு அவசியம்

## முதலமைச்சர் இசுறு தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பலமிழந்த அமைப்பாளர்களை நீக்கி, பலம் வாய்ந்த அமைப்பாளர்களை நியமிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் 2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பலம் பொருந்திய அமைப்பாளர்கள் தேவைப்படுவதால் அதற்கான நியமனங்களை வழங்குவது எமது பொறுப்பு எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற வைபவம் ஒன்றின் நிறைவில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்.

## செல்லத்துரை செல்வநாயகம்

எமது கல்லூரியின் பொருளியல் பாட ஆசிரியை
திருமதி. லவநிசா டேகீஸ்வரராசன் அவர்களின்
பாசமிகு தந்தையார் **செல்லத்துரை செல்வநாயகம் அவர்கள்**
15.10.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைவனடி
சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவருக்கும்
அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி-020)

கல்லூரிச் சமூகம்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

# நாமலுக்கு ஆதரவாக நேற்றும் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

நாமல் ராஜபக்ஷ உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் பேரணி நேற்று அம்பாந்தோட்டை தங்காலை நகரில் இடம்பெற்றது.

கூட்டு எதிர்க்கட்சியால் மேற்கொள்ளப்பட்ட இந்த கவனயீர்ப்பு போராட்டம் காலை 9மணியளவில் தங்காலை நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, திலும் அமுனு மக உட்பட ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# மரண அறிவித்தல்



அமரர் திரு.

## செல்லத்துரை செல்வநாயகம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு.செல்லத்துரை செல்வநாயகம் கடந்த *(15.10.2017)* ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் மரகதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனககந்தரம், வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யசோகன் (UK), உதயணன்(UK), சுதர்சன் (Australia), லவநிஷா (ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), சிவராம் (UK), சுகந்தன், லவதுஷா (ஆசிரியை, யா/கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாலயம்), லவப்பிரியா (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகிர்தா (UK), அனுசியா (UK), கௌசல்யா (Australia), டேகீஸ்வரராசன் (பிரதி பிரதம செயலாளர் அலுவலகம், திட்டமிடல், வடமாகாணம்), கஜேந்திரா (UK),மதுஷாந்தினி (ஆசிரியை, தி/ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரி), கஜேந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), ஆதீபன் (Canada), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிஸ், கீரன், உபாஸ், அபிநாஸ், சந்தோஸ், சைலேஸ், சானுஜா, ஒளிநிலவன், காருரன், அனன்ஜா, ஓவியா, சாதுரியன், கர்ணிகன், ஆராதனி ஆகியோரின் அன்புப் பேரனும் இராஜேஸ்வரி, சாரதாதேவி, சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(17.10.2017)* செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*(1033)*

இல 60, மணல்தரை வீதி,
கந்தர்மடம்.

தொ.இல: 077 786 6041

தகவல்,
குடும்பத்தினர்.

# இராசி பலன்

17.10.2017
(புரட்டாதி 31, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 12.43 மணிவரை
பூரம் முற்பகல் 7.45 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம்<br>இரவு 9.45 மணிக்கு<br>கன்னி-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி | குரு, புத | சூரி,சுக் செவ்,சந் |

**மேடம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** வாகன சுகமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் நலனில் உறவினர்கள் அக்கறை காட்டுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்** வாக்கு சாதுரியத்தால் காரியங்களை சாதிப்பீர்கள், புதிய பொருட்களை வாக்கும் எண்ணம் உருவாகும், குடும்பச் சுமை கூடும் நாள்.

**கன்னி** பொறுப்புகள் கூடும் நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**துலாம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை [illegible] காரிய[illegible] வேற்றுவீர்கள்.

**தனுசு** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூரதேசத்திலிருந்து வரும் தகவல்கள் மகிழ்ச்சி தரும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மகரம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தந்தை வழி உறவினரால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**கும்பம்** குடும்பத்தினரிடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய விடயங்களில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**மீனம்** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் குடிக்கும் டெங்கு குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## சுகாதாரத் துறையினர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவான நிலையில் சுற்றுச் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணி உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உள்ளூராட்சி திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் சூழல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் ஆனால் பொதுமக்கள் இது தொடர்பில் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை என சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி கரித்தே செல்கின்றது.

இது தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம், பொலிஸ் மற்றும் முப்படையினர் இணைந்து இருநாள் விசேட திட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

இந்த விசேட செயற்றிட்டத் தின் மூலம் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அதிகளவு பற்றைக் காணிகள் காணப் படுகின்றன.

இது கிராமப் புறங்களில் அதிகளவில் காணப்படுகிறது. இவ்வாறான காணிகளில் டெங்கு பெருகுவதற்கான சூழல் அதிகளவில் காணப்ப டுகிறது.

மாரிகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் டெங்கு பரவுவதற்கான சூழல் மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது.

எனவே கைவிடப்பட்ட காணிகள் உரிமையாளர்கள் அல்லது அக்காணிகளை பராமரிப்பவர்கள் உடனடியாக அவற்றை சுத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என உள்ளூராட்சி சபைகளால் அறிவித்தல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான சூழல்களாக சிரட்டைகள், கைவிடப்பட்ட நிலையில் உள்ள பூந்தொட்டிகள், நீர்த் தாங்கிகள், ரயர் போன்றவற்றை உடனடியாக அழிக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினமும் குறித்த சோதனை நடவடிக்கை யாழ். குடாநாடு முழுவதிலும் இடம் பெறவுள்ளது.

பொதுமக்கள் இந்த செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (இ-9)

# அதிபர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவுகளும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளும் இம்மாதம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தகவல்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளின் முடிவில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிபர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளையும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளில் முதல் கட்டமாக ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கான நிலுவைகளும் இம்மாதம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்காக மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏனைய ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் பிரதம செயலாளர் உறுதியளித்தபடி அடுத்த கட்டமாக வழங்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பலதரப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைத்து பிரதம செயலாளரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவரால் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு ஏற்ப இம்மாதச் சம்பளத்துடன் அதிபர்களுக்கான அதிகரிக்கப்பட்ட படிகளும், ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த சம்பள நிலுவைகளும் வடக்கு மாகாணத்தின் அனைத்து கல்வி வலயங்களிலும் வழங்கப்படவுள்ளமை மகழ்ச்சியை அளிக்கின்றது.

இன்னும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ள சம்பள நிலுவைகள் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என சங்கம் கேட்டு நிற்கின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, கல்விக்காக அதிகரித்த நிதியை ஒதுக்கியுள்ளதாக கூறியுள்ளார். அப்படியாயின் அத்தகைய நிதி வடக்கு மாகாணத்தில் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டு கல்வியில் மேம்பாட்டை ஏற்படுத்தும் என நம்புவோம் என்றுள்ளது. (இ-7)

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் தீபாவளிக் கொண்டாட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 4ஆம் ஆண்டு பூர்த்தி விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் நாளை தீபாவளி தினத்தன்று மாலை 5 மணிமுதல் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். இதன் போது கௌரவிப்பு நிகழ்வுகள் கலை நிகழ்வுகளுடன் தொன்மம் கலைக்குழுவின் பாரம்பரிய இசைவாத்தியச் சங்கமமும் அதனைத் தொடர்ந்து யாழ்ரியூன்ஸ் இசைக்குழுவின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## சின்மய நாதம் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாண்ம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் (ஒன்றுகூடல்) சங்கமம் நிகழ்வு மற்றும் சின்மய நாதம் காலாண்டுச் சஞ்சிகை மலர் 18 (ஐப்பசி/ மார்கழி 2017) வெளியீடு தீபாவளி தினமாகிய நாளை 18ஆம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் (இல.700, பருத்தித்துறை வீதி) இடம்பெறும். (இ-7)

## கடற்படை அச்சுறுத்தியதாக மீனவர்கள் முறைப்பாடு



(யாழ்ப்பாணம்)

மாதகல் துறைமுக கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களுடைய படகுகளை கடற்படையினர் சேதப்படுத்தி மீனவர்களையும் அச்சுறுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் மாதகல் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகளுக்குள் நுழைந்த கடற்படையினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது மீனவர்களுடைய இரண்டு படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளையும் சேதப்படுத்தி மீனவர்களையும் அச்சுறுத்தியுள்ளனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாதகல் பகுதிக்குள் விரைந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினருக்கு எதிராக அமைதியான முறையில் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேவேளை இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-104)




## மறுமலர்ச்சி மன்றத்தில் தீபாவளி விழா

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சி இளைஞர் கழகமும் மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் தீபாவளி பெருவிழா நாளை புதன் கிழமை அன்று பி.ப 4 மணியளவில் காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறும். இவ்விழாவில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் தேசிய நாடக போட்டியில் பங்கெடுத்த அயூரனின் நெறியாள்கையில் உருவான அன்பிற்காய் வாழ்வதற்கே தேசம் ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம் பெறவுள்ளன. (இ-7)



வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மலர்ந்து சிரிக்கும் பல உயிர்கள் உங்கள் உதவிக் கரத்தால் வாழட்டும் எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் தெல்லிப்பிழை பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது. இதில் தெல்லிப்பழை வைத்தியசாலை இரத்த வங்கி குழுவினர், கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

## முத்தமிழ் விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியின் முத்தமிழ் விழாவும் சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் வாசுகி தனபாலன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் கு.ஜெயம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தசங்கரிக்கு சமாதானத் தூதுவர் விருது



(கொழும்பு)

Council of Justice of Peace வின் 2017ம் ஆண்டுக்கான சமாதான தூதுவர் விருது இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு வழங்கப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி மாலை அக்கரைப்பற்று மெங்கோ கார்டன் ஹோட்டலில் இடம் பெற்ற தேசகீர்த்தி விருதுகள் வழங்கும் நிகழ்வில் குறித்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

நல்லிணக்க மற்றும் சமத்துவத்துக்காக பாடுபட்ட ஏனைய 30க்கும் மேற்பட்ட சமாதான நீதவான்களுக்கும் கவுன்சிலின் தலைவர் மஹேஸ்வரன் ஆகியோருக்கும் தேசகீர்த்தி விருதுகள் வழங்கப்பட்டன.

சமாதான நீதவான்களின் பேரவையின் தெற்காசியாவிற்கான இலங்கை வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சமாதானத்திற்காக பணி யாற்றியவர்களை கௌரவிக்கும் நோக்குடன் 2006ஆம்ஆண்டு யுனெஸ்கோவினால் அதி உயர் விருதான சமாதானத்திற்கும் சகிப்புத் தன்மைக்குமான விருது வீ.ஆனந்தசங்கரிக்கு வழங்கியிருந்தது.

இந்நிலையில் இலங்கைத் தீவில் சமாதானத்திற்காக உழைத்த இவருக்கு சமா தான தூதுவர் விருது வழங் கப்பட்டு கௌரவிக் கப்பட் டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (இ-7)

# ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் யாழில் டெங்கு ஒழிப்புத் திட்டம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் திடீரென அதிகரித்திருக்கும் நிலையில் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகளில ஒன்றான நல்லூர் பிரதேசத்தில் நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவினர் நேற்று விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் 4ஆம் இடத்தில் நல்லூர் பிரதேசம் காணப்படுகின்றது. இந்நிலையில் நல்லூர் பிரதேச சபையினால் மேற்படி டெங்கு காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் நேற்று காலை 7.30 தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையில் மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து நல்லூர் பிரதேச சபையின் சுகாதார பிரிவினர் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய மத்திய சுகாதார அமைச்சினால் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு குழு உருவாக்கப்பட்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் யாழ்.மாவட் டத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகம் உள்ள இடங்களில் நல்லூர் பிரதேசம் 4ஆம் இடத்தில் உள்ளது.

நல்லூரில் குறிப்பாக ஜே/110, ஜே/118 கிராம சேவகர் பிரிவுகளில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் உணரப்பட்டுள்ளது. எனவே இந்த கிராமசேவர் பிரிவுகளில் இன்று (நேற்று) விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்களை நல்லூர் பிரதேச சபையின் சுகாதார பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து நடத்தினர் எனத் தெரிவித்தனர். (இ-4)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாத த்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகத்தில் வாசகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நூலக மண்டபத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் முன் பள்ளி மாணவர்களுக்கான திருக்குறள் மனனம் , கதை கூறல் மற்றும் கோலம் போடுதல் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கும் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு தரம் ஒன்று தொடக்கம் 5 வரையிலான மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டியும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தரம் 6-13 வரையிலான மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியும் 20 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு தரம் 9-13 வரையிலான மாணவர்களுக்கு கவிதைப் போட்டியும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தரம் 6-8 வரையிலான மாணவர்களுக்கு குழுப்பாடலும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தரம் 9-11 வரையிலான மாணவர்களுக் கான குழு நடனம், 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தரம் 6-8 வரையிலான மாணவர்களுக்கான கோலம் போடுதல், தொடர் ந்து முற்பகல் 11 மணிக்கு தரம் 9-11 வரையிலான மாணவர் களுக்கான மலர் மாலை கட்டுதல், 29 ஆம் திகதி ஞாயி ற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு தரம் 9-11 வரையிலான மாணவர்களுக்கான விநாடி வினாப் போட்டியும் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு தரம்12,13 மாணவர்களுக்கான சித்திரப் போட்டியும்29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டியும் இடம்பெறவுள்ளன. (இ-10-105)

# பிரசன்ன உள்ளிட்ட 32 பேருக்கு 30வரை விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப் பினர் பிரசன்ன ரணவீர, மாகாண சபை உறுப்பினர் களான உபாலி கொடிகார, மேஜர் அஜித் பிரசன்ன மற் றும் 29 பேருக்கான விளக் கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள் ளது. அண்மையில், அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில், இவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, டி.வி. சானக்க, மாகாண சபை உறுப்பினர்களான சம்பத் அது கோரல உள்ளிட்ட8 பேருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுபான்மையினர் நிம்மதியாக வாழக் கூடிய அரசியல் யாப்பே நமக்குத் தேவை-நஷீர்

(ஏறாவூர்)

இந்த நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் உரிமையை உறுதிப்படுத்தி உத்தரவாதமளிக்கும் அரசியலமைப்பொன்றே தற்போது நாட்டிற்கு தேவை என கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தின் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

தற்போது உத்தேச அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பில் ஏற்பட்டுள்ள கருத்தாடல் குறித்து நேற்று வினவியபோதே அவர் இதனைக் கூறினார்.

ஒருமித்த நாடா? என்ற ஒற்றையாட்சி நாடா? என்ற விவாதத்திற்கு அப்பால்சென்று தற்போது தமக்கான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளனவா? அனைத்து இனங்களுக்கும் சமமான அங்கீகாரம் வழங்கப்படும் வகையிலான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா? என்ற விவாதங்களுக்கு விடை காண சமூகம் முன்வரவேண்டும்.

தற்போது சில அரசியல் கட்சிகள் அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் உள்ள ஒருமித்த நாடு என்ற பதத்தை முன்வைத்து பாரிய குழப்பங்களை ஏற்படுத்த முனைந்து வருகின்றனர்.

இதனூடாக பெரும்பான்மை மக்களை குழப்பி உத்தேச அரசியலமைப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பு முன்னெடுக்கப்படுமாயின் அதனை தோற்கடித்து நாட்டில் தொடர்ச்சியாக சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையினருக்குமான பிரச்சினைகளை நீடிக்கச்செய்து அதில் தமது அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்காக ஒரு சில குழுக்கள் முயற்சித்துக் கொண்டுள்ளன.

அத்துடன் இவர்களுடன் இணைந்து சில சிறுபான்மையின அரசியல் வாதிகளும் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அப்பால் சென்று புதிய அரசியலமைப்பில் கூறப்படாத வடக்கு- கிழக்கு இணைப்பு போன்ற விடயங்களை கூறி மக்களுக்கிடையே வீணான பிரச்சினைகளை உருவாக்கி சிறுபான்மையினருக்கு தீர்வு கிடைப்பதை விரும்பாத பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு துணை புரிந்து வருகின்றனர்.

இந்த நாட்டில் நிம்மதியாக வாழ்வதற்கான தீர்வினைப்பெற்றுக்கொள்ள பெரும்பான்மையின இனவாதிகளைப்போல் சிறுபான்மையின புல்லுருவிகளிடமும் நாம் போராட வேண்டியுள்ளது.

ஆகவே சிறுபான்மைச் சமூகம் என்ற ஒருமித்த பதத்திற்குள் முஸ்லிம் சமூகத்தின் சுய கௌரவத்துடனான இருப்பு குறித்த கேள்விகள் இருக்கின்றன.

புதிய அரசியல் யாப்பு வரையப்பட முன்னர் அது குறித்த விடயங்களை நாம் தமிழ் தலைமைகளுடன் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்குள் வரவேண்டிய தேவையும் இருக்கின்றது.

மாகாணங்களுக்கான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்பதுடன் ஆளுநர் தெரிவில் குறித்த மாகாண மக்களுடைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

அத்துடன் தேர்தல் முறை சீர்திருத்தங்களிலும் முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் குறித்து கூடுதல் கரிசனை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

தற்போது சிறுபான்மை சமூகங்களின் மத மற்றும் கலாசாரங்களை பின்பற்றுவதற்கான உரிமைகள் தொடர்பில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுபவர்களுக்கு எதிரான கடுமையான சட்ட ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்அரசியலமைப்பு தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் மிக ஆளுமையுடனும் பொறுப்புணர்வுடனும் தெளிவுபடுத்தி வருகின்றார்.

ஆகவே எமது சமூகம் தேவையற்ற பீதிகளை ஏற்படுத்துவோரின் கருத்துக்களுக்குள் முடங்கியிராமல் அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை குறித்து தெளிவான கருத்தாடல்களை ஏற்படுத்தி அது குறித்த விவாதங்களை முன்னெடுத்து சிறுபான்மை சமூகத்துக்கான சாதக பாதகங்கள் குறித்து தெளிவாக ஆராய முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கரவெட்டி மத்தொனியைச் சேர்ந்த
உயர்திரு
**அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன்**
(ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
அவர்கள்
Congratulations!
யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி
திரு ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில்
**அகில இலங்கை சமாதான நீதவானாக**
சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு
வாழ்த்துகின்றோம். இவருடைய சேவை
எல்லா மக்களுக்கும் சென்றடைய
வேண்டும் என இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்:
கலாநிதி சி.குகநேசன், சண்டிலிப்பாய்
(025)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



குப்பிழான் திரு.
**கந்தையா கிருஷ்ணன் (சிங்கப்பூர்)**
100ஆவது பிறந்த நாள் 17.10.2017

தங்களின் நிதியுதவி மூலம்
விக்கினேஸ்வராவுக்கு
பிரதான மண்டபமும் சரஸ்வதி சிலையும்
அமைத்து வழங்கியதுடன்
வருடாவருடம் பாடசாலை நூலகத்திற்கு
நூல்கள் அன்பளிப்புச் செய்து
அக மகிழும் வேளை
இன்று ஏழைகளின் தீபாவளி
நன்னாளை முன்னிட்டு
உலர் உணவுப் பொதிகள்
நூறை வழங்கி மகிழ்விக்கும்
தங்களுக்கு எமது பல்லாண்டு
நல்வாழ்த்துக்கள்.
Congratulations!
(சி-019)

குப்பிழான் விக்னேஸ்வரா பழைய மாணவர்கள் சார்பில்
திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன் ( M.A அதிபர் )


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு பெருங்காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் வெடிபொருட்கள்




முல்லைத்தீவு பெருங் காட்டுப் பகுதியில் அபாயகரமான இராணுவ வெடிபொருட்கள் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இறுதி யுத்தத்தின் போது இந்தப் பகுதியில் வெடிபொருள் களஞ்சியம் ஒன்றை வைத்திருந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த காட்டுப்பகுதியில் இருந்து வவுனியா, நெடுங்கேணி, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு கனரக வாகனங்களின் ஊடாக வெடி பொருட்களை கொண்டு செல்லக் கூடிய தரை வழிப்பாதைளும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் யுத்த காலத்தில் அந்த இடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் தற்பொழுது அங்கிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்படும் அபாயகரமான வெடிபொருட்கள் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-310-281)

# கல்வியை சீராகத் தொடருவதற்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துங்கள்

## மாணவர்கள், பெற்றோர் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து சேவைகள் இம்மையால் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காட்டுவழியாக கால்நடையாக பாடசாலைகளுக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஆறாம்கட்டை ஆகிய பகுதிகள் ஊடாக வவுனிக்குளம் பாலிநகர் வரை செல்கின்ற வீதியூடாக எந்தவித போக்குவரத்துக்களும் இன்றி காணப்படுவதனால் இங்கு வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியிலுள்ள அம்பாள்புரம் பாடசாலையில் தரம் 5 வகுப்புக்கள் மட்டுமே இருப்பதனால் ஏனைய உயர்தர வகுப்பு மாணவர்கள் ஏழு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள வன்னிவிளாங்குளம், மாங்குளம், மல்லாவி ஆகிய பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

குறித்த வீதி பெரும் காடுகள் நிறைந்த பகுதியாகவும் காடுகள் அற்ற பகுதியாகவும் காணப்படுவதுடன் போக்குவரத்து வசதிகள் இன்றியும் காணப்படுகின்றது.

இதனால் இந்த மாணவர்கள் கால்நடையாகவே பாடசாலைக்குச் சென்று வருகின்றனர். எனவே பாடசாலை மாணவர்களுக்கேற்ற வகையில் பேருந்துச் சேவையை ஏற்படுத்தித்தருமாறு பிரதேச செயலாளர், மாவட்ட அரச அதிபர், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்கு பல தடவைகள் கடிதங்களை அனுப்பியும் நேரடியாக தெரிவித்தும் இதுவரை எந்த வித போக்கு வரத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவில்லை என இப்பகுதி மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# கடத்தப்பட்ட கறவைப் பசுக்கள் இறைச்சியாக்கிய நிலையில் கைப்பற்று

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நரேந்திரபுரம் கிராமத்தில் கன்றுகள் ஈனும் நிலையில் இருந்த 02, கறவைப் பசுகளை திருட்டுக் கும்பல் ஒன்று கடத்திச் சென்று இறைச்சியாக்கிய நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் 02, பேரை தருமபுரம் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். ஜீ. விமல குணரட்ணாவின் உத்தரவுக்கு அமைய நரேந்திர புரம் கிராமத்தில் வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதற்காக வளர்க்கப்பட்ட தலா 80, ஆயிரம் ரூபா பெறுமதியான 02, பசு மாடுகளை கடத்திச் சென்று ஆட்களற்ற பாழடைந்த வீடு ஒன்றில் வைத்து இறைச்சியாக்கிக் கொண்டிருந்த போது, திடீரென பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போதே களவாடப்பட்ட பசுமாடுகள் இறைச்சியாக்கிய நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டிருப்பதுடன்

கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)



வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பேரூர் ஆதீன இளைய சந்நிதான சீர்வளர்சீர் டாக்டர் மருதாசல அடிகளார் உட்பட தமிழ்ச் சங்கப் பிரமுகர்கள் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

# இரணைமாதா நகர் மீன்பிடி இறங்குதுறையை ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி இரணைமாதாநகர் மீன்பிடி இறங்கு துறையை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு மேற்படி கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரணைமாதா நகர் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.




இந்நிலையில் கடற்றொழிலாளர்கள் தமது படகுகளை தொழிலுக்கு கடலினுள் கொண்டு செல்வதற்கும் படகுகள், வலைகள் மற்றும் ஏனைய கடற்றொழில் உபகர ணங்கள் கரைசேர்ப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த இறங்குதுறையை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் குறித்த இறங்குதுறை புனரமைக்கப்பட்டபோதும், படகுகளை கரைசேர்க்கும் பகுதி ஆழம்குறைந்த பகுதியாகவும் காணப்படுவதாகவும் இதனை மீள்புனரமைப்பு செய்து தருமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-315)



மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையின் [illegible] அண்மையில் நடைபெற்றபோது.. (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இரு கிராம மக்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு

(குருமன்காடு)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் இரு கிராமத்தவர்களுக்கிடையில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த முரண்பாடுகளுக்கு சுமுகமாகத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.



கிராம அலுவலர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நொச்சிமோட்டை கிராம அலுவலர் அலுவலகத்தில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறிரெலோ கட்சியின் செயலாளர் ந்ாயகம் உதயராசா, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, மதகுருமார், ஓமந்தை பொலிஸார், சின்னப் புதுக்குளம் மற்றும் நொச்சிமோட்டை கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே சுமுகத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் பெண் ஒருவருடன் கதைத்ததாக புதிய சின்னக்குளத்தை சேர்ந்த இளைஞொருவரை சிலர் தாக்கியதில் குறித்த இளைஞர் [illegible] வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந் நிலையில் குறித்த இளைஞனை தாக்கியவர்களுக்கு நடவடிக்கையை பொலிஸார் எடுக்கவில்லை என புதிய சின்னக்குளத்தை சேர்ந்த 50 இற்கும் மேற் பட்டோர் கடந்த திங்கட்கிழமை நொச்சிமோட்டை பகுதிக்கு சென்று கடை ஒன்றினை அடித்து சேதப்படுத்தினர்.

இதன் தொடர்ச்சியாக சின்னப்புதுக்குளம் பகுதியைச் இளைஞர் ஒருவர் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நொச்சி மோட்டைப் பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டோர் நொச்சி மோட்டை கிராமத்திற்குள் புகுந்து வீடுகளை சேதப்படுத்தியதுடன் அங்கு நின்றவர்கள் மீது தாக்குதலையும் மேற்கொண்டனர்.

மூவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையிலேயே அப்பகுதி மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றை இணைத்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதுடன், இனிவரும் காலங்களில் இரு கிராமத்தவர்களும் சண்டையில் ஈடுபடுவதில்லை எனவும், இரு கிராமங்களுக்குள் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் மதகுருமார் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக தீர்வு காண்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதுவரை இரு கிராமங்களில் நடைபெற்ற வன்முறைகளுக்கும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டு இரு கிராமத்தவர்களும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவுக்கு விஜயம்

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறும் நடமாடும் சேவையில் பங்குபற்றுவதற்காக இருவரும் வருகை தரவுள்ளனர்.

தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி நடமாடும் சேவை இவ் ஆண்டு மூன்று இடங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முதலாவது ஜனாதிபதி நடமாடும் சேவை பொலநறுவையிலும் இரண்டாவது நடமாடும் சேவை காலியிலும் நடைபெற்ற நிலையில் மூன்றாவதும் இவ்வாண்டின் இறுதியுமான நடமாடும் சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர குணவர்த்தன உள்ளிட்ட பல அமைச்சர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வன்னிப் பகுதியில் வசிக்கும் 5 ஆயிரம் மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், திவிநெகும திட்டத்தின் கீழ் ஆயிரம் பேருக்கு வாழ்வாதார உதவியும், இளைஞர்களின் தொழில் முயற்சிக்காக ஆயிரம் பேருக்கான உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந் நடமாடும் சேவையில் அடையாள அட்டை, கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், காணி உறுதிப்பத்திரம், பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# அனைத்து சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலும் ஒருவார காலம் சிரமதானப்பணி முன்னெடுக்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)



முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள அனைத்து சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அணைக்கட்டுக்கள், பிரதான கால்வாய்கள், கிளை கால்வாய்கள் உட்பட பல்வேறு குளப் பகுதிகளில் விவசாயிகள், மீனவர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் இணைந்து பங்கு கொள்ளும் சிரமதானப் பணிகள் ஒரு வார காலம் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

வருடாந்தம் நடைபெற்று வரும் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட சிறு குளங்களின் கீழான சிரமதானப் பணிகளானது, இம்முறையும் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான ஒரு வாரகாலம் நடைபெறவுள்ளது.

எனவே, விவசாயிகள், மீனவர்கள், பொதுமக்கள், தங்கள் பகுதியில் உள்ள கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பகுதி குளங்களின் கீழான சிரமதானப் பணிக்குரிய கால அட்டவணையைத் தயாரித்து சிரமதானப் பணிகளை முன்னெடுத்து 'ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## வரட்சி நிவாரணம் பெறுவதற்கு சிரமப்படுகின்றோம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வரட்சி நிவாரணம் பெற்றுக் கொள்வதில் பெறும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மாவட்டச் செயலகத்தின் ஊடாக வரட்சி நிவாரண அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக பாதிக்கப்பட்ட பொதுமக்களை கிராம சேவையாளர்கள் பொது வேலைகளில் அமர்த்தியிருந்தனர்.

இந்நிலையிலும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு இன்னமும் முற்றும் முழுதாக நிவாரணங்கள் வழங்கிமுடிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.(2-281)




# உரமானியக் கொடுப்பனவு இறுதி விண்ணப்ப முடிவுத் திகதி நாளை

## ஒலுமடு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான கால போக நெற்ச் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவுக்குரிய விண்ணப்ப பதிவுகள் நடைபெற்ற போது இதுவரை பதிவுகள் செய்யத் தவறிய விவசாயிகளுக்கான இறுதிக் கட்ட பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஒலுமடு கம்நல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கான நடப்பாண்டுக்குரிய கால போக நெற் செய்கைக்கான உரமானியக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்கள் கமக்கார அமைப்புக்கள் ரீதியாக பதிவுகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன.

இந்தப் பதிவுகள் நடைபெற்ற காலப்பகுதியில் உரமானியக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களை பதிவு செய்யத் தவறிய அனைத்து விவசாயிகளின் நலன் கருதி நாளை புதன் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் பதிவுகள் நடைபெறவுள்ளன.

எனவே பதிவுகளை மேற்கொள்ள தவறிய விவசாயிகள் அனைவரும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் நேரில் வருகை தந்து சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)

# பெண் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் உற்பத்தி,விற்பனை கண்காட்சி



(மல்லாவி)

இலங்கை பெண்கள் பணியகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெண் சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தி, விற்பனை கண்காட்சி" நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக உள்ள பொதுத் திடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி - கேதீஸ்வரனினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வெலிஓயா பிரதேச செயலக பிரிவு தவிர்ந்த ஏனைய 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்தும் 30 பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் தமது சுயதொழில் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி இருந்ததுடன் பொதுமக்களுக்கு அதனை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, அரச உத்தியோகத்தர்கள், உள்ளூர் (கொழும்பு) சுற்றுலாப் பயணிகள் உட்பட பலதரப்பட்ட மக்களும் ஆர்வத்துடன் பொருட்களை பார்வையிட்டதுடன் கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். (2-15)

# விசேட வீதி கண்காணிப்பு நடவடிக்கையில் மணல் கடத்திய உழவு இயந்திரங்கள் சிக்கின

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள கிராமங்களில் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்ட விசேட வீதி கண்காணிப்பு மற்றும் ஊர் சுற்றுக் காவல் கடமைகளின் போது சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிப்பயணித்த 4 உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2 நாட்களாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற்று வருவதையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தரவுக்கமைய விசேட ஊர்சுற்றுக் காவல் கடமைகளில் புதுக்குடியிருப்பு பொலிஸாருடன் இணைந்து கிராம இளைஞர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நான்கு உழவு இயந்திரங்கள் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையிலும் மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றியும் மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்த போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது, கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தப்பியோடிய ஆசிரியர் மடக்கிப்பிடிப்பு

(குருமன்காடு)

வவுனியா நகரப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஆசிரியர் ஒருவர் மது போதையில் போக்குவரத்து பொலிஸாருக்கு வாகனத்தை நிறுத்தாது தப்பியோடிய நிலையில் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, உள்வட்ட வீதியில் நேற்று முன்தினம் காலை குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப்பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் உள்ளவட்ட வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது போக்குவரத்துப் பொலிஸார் அவரது மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளனர்.


ஆனால் அவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தப்பியோடியுள்ளார். பொலிஸார் தொடர்ந்தும் விரட்டிய போது புகையிரத, நிலையத்திற்கு அண்மையில் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு ஓடியுள்ளார். அதைக் கைப்பற்றிய பொலிஸார் தொடர்ந்து குறித்த ஆசிரியரை விரட்டிப் பிடித்தனர்.

இதன்போது குறித்த ஆசிரியர் மது போதையில் இருந்தமை தெரிய வந்ததுடன் ஆசிரியரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களும் இருக்கவில்லை. இதனையடுத்து அவரை கைது செய்த போக்குவரத்துப் பொலிஸார் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன்போது குறித்த ஆசிரியரை ஒருநாள் விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, குறித்த ஆசிரியருக்கு எதிராகவே அவதூறாக மாணவர்கள் இருவர் துண்டுப்பிரசுரம் ஒட்டியதாக அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று ஒக்டோபர் 17. உலக வறுமை ஒழிப்பு நாள். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுமாகிறது.**




# வயிற்றுக்குச் சோறிட வேண்டும்...

உலகில் ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டால், அங்கு அவரது மனிதவுரிமை மீறப்படுகிறது என்கிறார் பிரான்ஸ் நாட்டைசேர்ந்த ஜோசப் ரெசின்கி. இவர் சிறு வயது முதலே வறுமைக்கு எதிராக போராடினார். இவரது முயற்சியால் உலக வறுமை ஒழிப்பு தினம் 1987 ஒக்.17இல் உருவாக்கப்பட்டு ஐ.நா. சபையால் இத்தினம் அங்கீகரிக்கப்பட்டது.

உலக வாழ்க்கையை உருவாக்கிய மனிதர்களுக்கு உலகத்தில் வாழவும் தெரிய வேண்டும். உலக வறுமை ஒழிப்பு நாள் **(International Day for the Eradication of Poverty)** ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக வங்கியின் தரவுகளின்படி 1.4 பில்லியன் மக்கள் மிகவும் வறுமைக் கோட்டின் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்றார்கள்.

வறுமையை ஒழிக்கவும், அனைவருக்கும் அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யவும் உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என் ஐ.நா. வலியுறுத்துகிறது. "ஒருவர் கூட வறுமையில் இருக்கக்கூடாது : வறுமையால் உருவாகும் வன்முறைக்கு முடிவு: யோசித்து முடிவெடுத்து வறுமைக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுதல்" என்பது இந்தாண்டு மையக்கருத்து. எது வறுமை: அனைவருக்கும் சுத்தமான தண் ணீர், சத்தான உணவு, மருத்துவம், வேலை வாய்ப்பு, சுகாதாரம், கல்வி, உடை, இருப்பிடம் கிடைக்க வேண்டும். இவை இல்லாத அனைவரும் வறுமை நிலையில் இருப்பவர்கள் என கருதப்படுகிறார்கள். வறுமை, பட்டினி வன்முறைக்கு வழிவகுக்கிறது.

உலக மக்கள் தொகையில் பாதிப் பேரின் (50 சதவீதம்) ஒருநாள் வருமானம் 150 ரூபாய்க்கு கீழ் உள்ளது. அதே போல 14 சதவீதம் பேரின் ஒருநாள் வருமானம் 75 ரூபாய்க்கும் கீழ் உள்ளது. என்ன காரணம்: மக்கள் ஏழ்மை நிலையில் தள்ளப்படுவதற்கு அரசியல்வாதிகள், ஊழல், இலஞ்சம், கல்வி யறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, புதிய தொலைநோக்கு திட்டங்களை செயற்படுத்தாமல் இருப்பது எனப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இருப்பினும் முக்கிய காரணம் ஏழை மக்களின் பசியைப் போக்குவதற்கு எந்த அரசுக்கும் அக்கறையில்லாதது தான் முக்கிய காரணம்.

உலகில் ஏற்படும் மரணங்களில், அதிகம் வறுமையினால்தான் ஏற்படுகிறது. எய்ட்ஸ், மலேரியா, டிபி., போன்ற நோய்களால் உயிரிழப்பவர்களை விட, வறுமையினால் இறப்பவர்கள் அதிகம். உலகில் 87 கோடி பேர் போதிய உணவின்றி வறுமையில் பாதிக்கப்பட்டுள்ளனர். 100 கோடி பேருக்கு சுத்தமான குடிநீர் வசதி இல்லை. இதில் 40 கோடி பேர் சிறுவர்கள். 160 கோடி பேர் மின்சார வசதியின்றி வாழ்கின்றனர்.

ஏழ்மை நிலையில் இருப்பவர்களை ஒரே நாளில் வசதியானவர்களாக மாற்றிட முடி யாது. ஆனால் இப்போதிருந்து பல தொலை நோக்கு திட்டங்களைத் தீட்டினால், வரும் சந்ததியினரும் தொடர்ந்து வறுமைக் கோட்டிலேயே வசிப்பதை தவிர்க்கலாம். கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வழங்கினால் வறுமை ஒழியும்.

இவர்களின் நாள் வருமானம் 1.25 டொலர் ஆகும். சர்வதேச ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வறுமை காரணமாக மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வித மாகவும், பசிக் கொடுமையில் இருந்து மக் களை விடுவிப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை 1992ஆம் ஆண்டு வறுமை ஒழிப்புத் தினத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. "வறுமைக்கு எதிரான குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் வேண்டுகோள்", 2009 ஆம் ஆண்டின் சர்வதேச வறுமை ஒழிப்பு நாளின் தலைப்பாகும். இந்நாள் முதன் முதலாக 1987 ஆம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் நகரில் கடைப்பிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை, பயம் என்பவற்றுக் பலியானோரை கௌரவிக்கும் வகையில் சுமார் பத்தாயிரம் மக்கள் "டொர்கேட்ரோ"வின் மனிதவுரிமைகள் மற்றும் விடுதலை சதுக்கத்தில் ஒன்று கூடினர்.

இவர்கள் உலகளாவிய ரீதியில் வறுமை நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர். வறுமை நிலை காரணமாக உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டிய தன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக்குக் கீழ் வாழும் மக்களை ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என வரைவிலக்கணப்படுத்தலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகின்றது. தீவிர வறுமை நிலை என்பது நாளொன்றுக்கு 1.25 டொலர்களுக்கும் குறைவான தொகையில் ஒருவர் வாழ்க்கை நடத்துவது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பொது வாக வறுமை நிலை உணவு, சுத்தமான நீர், உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புக்கள், மனித அரசியல் உரிமைகள், பிற சமூகங்களுடன் தொடர்புகள் அற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக் கின்றது. உலகளாவிய ரீதியில் வறுமை சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ள தாக வோஷிங்டனில் நடைபெற்ற நிதி மற் றும் வளர்ச்சித் துறை மாநாட்டில் (2009) எச் சரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பின்னடைவினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் உச்சக்கட்டத்தை சந்திக்கப்போகும் 2009ஆம் ஆண்டில் ஒன்று "செய் அல்லது விடு" என்ற உறுதிப்பாட்டுடன் சிக்கலை எதிர்நோக்கிச் செயற்படப் போவதாக ஒபாமா அறைகூவல் விடுத்தமையையும் இவ்விடத்தில் நினைவு கூரல் வேண் டும். இவ்வாறாக திட்டங்கள் தீட்டப்பட்டாலும் கூட, அறைகூவல்கள் விடுக்கப்பட்டாலும்கூட வறுமை காரணமாக பாடசாலைக்குச் செல் லாத குழந்தைகளின் எண்ணிக்கை 12 கோடிக்கு மேல் என சில புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. உலக நாடுகள் இராணுவ தளபாடங்கள் வாங்கும் செலவில் ஒரு சத வீதத்தை ஒதுக்கினாலே கூட உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க வழி செய்து விடலாம் என திட்டமிடப்பட்டது. எனினும் அனை வருக்கும் கல்வி என்பது உலகளாவிய ரீதியில் இன்றுவரை கனவாகவே உள்ளது. வசதி படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கு இடையேயான இடை வெளி வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. அபிவிருத்தியடையாத 48 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலகின் முதல் மூன்று பணக்காரர்களின் சொத்து மதிப்பை விட குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக பணக்காரர்களில் 20 சதவீதம் பேர் உலகின் மொத்த வளங்களில் 86 சதவீதத்தை கைப்பற்றியுள்ளனர். மீதமுள்ள 80 சதவீத மக்களுக்கு கிடைப்பது வெறும் 14 சத வீதம் மட்டுமே. ஏழ்மைக்கு முக்கிய காரண மாக ஊழல் உள்ளது. வறிய நாடுகளின் முன்னேற்றத்துக்கு தடையாக உள்ள ஊழலை வளர்ந்த நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றன. அதிகாரிகளை வளைக்க வும், ஒப்பந்தங்களை கைப்பற்றவும் முறை கேடான வழிகளில் பணத்தைச் செலவிடும் இந்த நிறுவனங்கள் ஏழை நாடுகளின் குடிமக்களின் வரிப்பணத்தை தெரிந்தே சுரண்டுகின்றன. குற்றங்கள் அதிகரிக்க வறுமை யும் ஒரு காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. வறுமையும், ஏற்றத் தாழ்வுகளும் நிறைந்த சமூகத்தில், வன்முறையையும், குற்றங்களையும் தவிர்க்க முடியாது. உல களாவிய ரீதியில் மக்கள் தொகை கூடிய நாடான சீனாவில் வறுமை ஒழிப்பு சாதனை, உலகின் வறுமை ஒழிப்பு முன்னேற்றப் போக்கைத் தூண்டி, உலக வறுமை ஒழிப்புப் பணிக்குப் பெரிய பங்காற்றியது என சீன அர சவையின் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச் சிக்கான தலைமைக் குழுவின் அலுவலகத் தலைவர் **Fan Xiaojian** அண்மையில் வெளியிட்ட கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந் தார். ஐ.நாவின் புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளில், வறிய மக்கள் தொகையைப் பாதியாகக் குறைப்பது என்ற இலக்கை முன் கூட்டியே நனவாக்க முனையும் ஒரு நாடா கவே சீனா உள்ளது. அதே நேரம் இந்தியாவும் வறுமை ஒழிப்புக்காக வேண்டி பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. வறுமையில் வாடும் குடும்பங்களை ஒரே தேவையுள்ள குழுக்களாக **(Common Interest Groups - CIG)** ஒன்றிணைத்து அவர்களின் முழுமையான மேம்பாட்டிற் கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கும் மாவட்ட வறுமை ஒழிப்புத் திட் டத்தை உலக வங்கியின் ஆலோசனை யின் பேரில் 2000 ஆம் ஆண்டு முதல் மத்திய பிரதேச அரசு செயற்படுத்தி வரு கின்றது.

மத்தியப் பிரதேசத்தின் 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட 2,900 கிராமங்களில் வாழும் 3,25,000 மக்களை 52,000 குழுக்களாக ஒன்றிணைத்து உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களின் வருவாய் 65 விகிதமாக உயர்ந்துள்ளது என்றும், விவசாய உற்பத்தி 149' விகிதமாக உயர்ந்துள்ளது என்றும், விவசாயத்திற்கான பாசனப் பரப்பு 27 விகிதமாக அதிகரித்துள்ளது என்றும் சில புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதே அடிப்படையில் மாவட்ட வறுமை ஒழிப் புத் திட்டம் - 2 என்ற பெயரில் 5000 கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்காகவே உலக வங்கியின் தனி நபர் மேம்பாட்டு கணக்குத் திட்டத்தின் கீழ் **(Individual Development Account - IDA)** 100 மில்லியன் டொலர் கடன் கொடுக்க முடிவு செய்துள்ளதாக உலக வங்கியின் இந்தியக் கிளையின் இயக்குநர் ராபர்ட்டோ ஜாகா மும்பையில் அண்மையில் தெரிவித்திருந் தார்.

இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியைக் கொண்டு சுய உதவிக் குழுக்களைப் போல கூட்டுத் தொழில் செய்யவும் இக்குழுக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அப்படிப் பல குழுக்கள் செய்து பலன் பெற்றும் உள்ளன என்று உலக வங்கி அறிக்கை கூறுகிறது. மக்களை பசிக் கொடுமையிலிருந்து வெளிக்கொண்டுவர வளர்முக நாடுகள் மேற்கொண்டுவரும் முயற்சிகள் தொடர்பில் அக்ஸன் எய்ட் நிறுவனம் 2009 இறுதிப்பகுதியில் வெளியிட்டுள்ள ஓர் ஆய்வறிக்கையில் இந்தியாவைக் கடுமை யாக விமர்சித்திருந்தது.

ஆனால் அந்த அறிக்கை பிரேசிலையும் சீனாவையும் பாராட்டியிருந்தது. உலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா அமைந்திருந் தாலும், தொண் ணூறுகளின் மையப் பகுதியிலிருந்து நாட்டில் போஷாக்கின்மையால் வாடுவோ ரின் எண்ணிக்கை 3 கோடியால் அதிகரித் துள்ளது என்று அக்ஷன் எய்ட் நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துவருவதாக கூறப்படுகிறது.

வறுமை ஒழிப்பில் சிறப்பாக செயற்பட்டுள்ள பிரேசில் அரசாங்கத்தை, அதன் நிலச் சீர்திருத்த திட்டங்களுக்காகவும், ஏழைகளுக்கு இலவசமாக உணவு வழங்கும் திட்டங்களுக்காகவும் இந்த அறிக்கை பாராட்டியுள்ளது. சீனா தனது விவசாயிகளுக்கு உதவித் திட்டங்களை அறிவித்து 5 கோடியே 80 இலட்சம் பேரை பசிக் கொடுமையிலிருந்து வெளிக் கொணர்ந்துள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னைய நிலைகளுடன் ஒப்பு நோக்கும் போது ஆசியாவின் வறுமை ஒழிப்பு ஓரளவு முன்னேற்றம் இருந்த போதிலும் கூட ஆபிரிக்க நாடுகளில் நிலைமை மிகமிக 'மோசமாகவே இன்று வரை காணப்படுகிறது.

2008ஆம் ஆண்டு உலக வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில் "உலக நாடுகளை பீடித்திருக்கும் நிதி நெருக்கடிக ளால் மேலும் 10 கோடி மக்கள் வறுமையில் தள்ளப்படலாம்" என்று அச்சம் தெரிவித்திருந் தது.

தற்போது சுமார் 1.4 பில்லியன் மக்கள் தீவிர வறுமையில் வாடுவதாக தெரிவித்துள்ள ஐ.நா. உணவு மற்றும் எரிபொருள் விலைகள் வானளாவ சென்றால் மேலும் 10 கோடி பேர் வறு மையில் தள்ளப்படுவார்கள் என்றும் கூறியுள்ளது.

"வறுமையை ஒழிக்கும் நமது பணி மனிதவுரிமைகள் மற்றும் மானுட மரியாதை ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாக கொள்வோம்.

**என்.ஹரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் திடீர் முடிவால் தமிழக மீனவர்கள் அதிருப்தி

(சென்னை)

இராமேஸ்வரம் முதல் நாகை, புதுச்சேரி மீனவர்கள் பாக்கு நீரிணை, வங்க கடலில் மீன்பிடிக்கின்றனர். 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து படகையும் சிறைப் பிடித்து வருகின்றது.



இந்நிலையில் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண கடந்த 14ஆம் திகதி டில்லியில் இந்திய, இலங்கை மீன்துறை அமைச்சர்கள் இடையே பேச்சுவார்த்தை நடந்தது.

இதில் மீனவர்கள், படகுகளை விடுவிக்கவும் மன்னார் வளைகுடா ஆழ் கடலில் மீன்பிடிக்க ஊக்கப்படுத்துவது என தீர்மானித்தனர்.

ஆனால் பேச்சுவார்த்தை முடிந்த 24 மணி நேரத்திற்குள் நேற்று முன்தினம் கொழும்பில் எல்லை தாண்டும் தமிழக மீனவருக்கு ரூபாய் 6.75 கோடி அபராதம் விதிக்கப்படும் என இலங்கை மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சு வெளியிட்ட அறிவிப்பு இந்திய மத்திய அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இலங்கை எல்லையில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை கைது செய்து படகை சிறை பிடித்ததால், மீனவர்களின் ஊடுருவலை கட்டுப்படுத்தியுள்ளோம்.

இந்நிலையில் எல்லை தாண்டும் மீனவர்களின் ஒரு படகிற்கு ரூபாய் 150 மில்லியன் (இந்திய மதிப்பில் ரூபாய் 6.75 கோடி) அபராதம் விதிக்க முடிவு செய்து இதற்கான திருத்தப்பட்ட மசோதா பாராளுமன்றத்தில் ஓரிரு வாரத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய, இலங்கை நிரபராதி மீனவர்கள் விடுதலைக்கான பிரதிநிதி யூ.அருளானந்தம் கூறுகையில்,

ஏற்கனவே தமிழக மீனவர்கள் படகிற்கு ரூபாய் 4.50 கோடி அபராதம் விதிக்க முடிவு செய்தது அதிர்ச்சியளித்த நிலையில், தற்போது ரூபாய் 6.75 கோடி அபராதம் விதிக்க மசோதாவில் திருத்தம் செய்யவுள்ளனர்.

இதனால் தமிழக மீனவர்களை அழிக்க இலங்கை அரசு திட்டமிடுகிறது. இதற்கு மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறினார் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிடப்பட்டுள்ளன.(இ-7)

# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சிவ பூசை முறைகளில் சித்தார்ந்த விளக்கம் (ஆன்மார்த்தம்) எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாகவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொள்வார். (இ-7-102)

## சீதன விவகாரம்

# போலி முகநூல் கணக்கால் மோதல் 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(சென்னை)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவின் புதிய காத்தான்குடிப்பகுதியில் இரு குழுக்களிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் ஏழு பேர் காயமடைந்துள்ள நிலையில் காத்தான்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மோதலில் காயமடைந்த மூவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திருமண வைபவமொன்றில் மணமகனொருவர் மணமகளிடம் சீதனம் பெற்றதாகத் தெரிவித்து அவரை விமர்சித்து போலியான முகநூல் பக்கமொன்றில் எழுதப்பட்டதாலேயே, இந்தக் குழு மோதல் ஏற்பட்டுள்ளதெனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(இ-7)

# அம்பாந்தோட்டை விவகாரம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பொலிஸ் பொறுப்பில் இருந்த நபரை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில். தேசிய பொலிஸ் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, மூவர் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.

மேலும், இவர்கள் ஒரு வாரம் அங்கு தங்கியிருந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

இதனையடுத்து, குறித்த குழுவின் அறிக்கை பொலிஸ் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும்.

அண்மையில், அம்பாந்தோட்டையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் முன்னால் இடம் பெற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கையின் போது, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் அப் பகுதிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரால் தாக்கப்படுவது போன்ற காணொளிகள் வெளியாகின.

பின்னர், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மாத்தறை பொலிஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

எது எவ்வாறு இருப்பினும் இந்த விடயம் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரி குறித்த அடுத்தகட்ட நடவடிக்கை தீர்மானிக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இரவில் திருட்டுத்தனமாக நாடு தாவும் அமைச்சருக்கு சிக்கல்

(கொழும்பு)

மாதம் ஒரு தடவை இரகசியமான முறையில் ஓர் இரவை மட்டும் கழிக்க வெளிநாடு சென்று விட்டு நாடு திரும்பும் அமைச்சர் ஒருவர் தொடர்பில், இராஜதந்திர மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த அமைச்சர், வெளி மாவட்டங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றின் தலைவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து, சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

"குறித்த அமைச்சர், தமது இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் ஒவ்வொரு மாதமும் சென்னைக்குச் சென்று இரவைக் கழித்துவிட்டு, மீளவும் மறுநாள் நாடு திரும்பியுள்ளாரென முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இரவு வேளையில், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானத்தில் சென்னைக்குச் சென்று மறுநாள் பகல் நேர விமான சேவையில் நாடு திரும்புகிறாரெனவும் தெரிய வந்துள்ளது.

"இப்பயணம் தொடர்பில், அரசாங்கத்துக்கோ, தூதரகத்துக்கோ, இராஜதந்திர ரீதியில் எவ்வித அறிவிப்புகளையும் விடுக்கவில்லை" என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராஜதந்திர சட்டத் திட்டத்தின்படி, அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது, அறிவிக்க வேண்டியது அவசியமாகும். தனிப்பட்ட விஜயம் என்றாலும் குறித்த நாட்டுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டியது அவசியமானது. அவ்வாறு அறிவித்தால் மாத்திரமே அவரது பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தப்பட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், குறித்த அமைச்சர் எவ்வித அறிவிப்பையும் விடுக்காமல் சென்றுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது. சில சமயங்களில் அவரது பயணங்களுக்கு உதவியாளர் ஒருவர் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களது இரகசியப் பயணம் கடந்த மாதம் இந்திய பாதுகாப்புத் தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவர்களது ஒரு நாள் பயணம் எந்நோக்கத்துக்கானது என விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன வென அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7799 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 38 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBCS/ சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4625 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/7800 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 55<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: G/4631 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: B/7058 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 44 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA/அரச தொழில்<br>தொ.இ: G/4648 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDA/ அரசதொழில்<br>தொ.இ: B/7059 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, SLAS/ அரச தொழில்<br>தொ.இ: G/4636 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அடுத்த ஆண்டு தீபாவளிக்குள் அயோத்தியில் இராமர் கோவில்

### சுப்பிரமணியன் சுவாமி உறுதி




(பாட்னா)

இந்த வாரம் நாம் தீபாவளி பண்டிகையை கொண்டாட உள்ளோம். அடுத்த ஆண்டு தீபாவளிக்குள் அயோத்தியில் இராமர் கோவில் கட்டப்படும் என்று சுப்பிரமணியன்சுவாமி தெரிவித்தார்.

பீஹார்மாநிலத்தில் நேற்று நடந்த கருத்தரங்கில் பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி கலந்து கொண்டு பேசினார்.

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கு பல்வேறு தடைகள் இருந்தன. அந்தத்தடைகள் ஒவ்வொன்றாக அகற்றப்பட்டு வருகின்றன. விரைவில் அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் பணி தொடங்கும். இதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மிகச் சிறப்பாக செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வாரம் நாம் தீபாவளி பண்டிகையை கொண்டாட உள்ளோம். அடுத்த ஆண்டு தீபாவளிக்குள் அயோத்தியில் இராமர் கோவில் கட்டப்படும்.

அடுத்த தீபாவளிக்கு பக்தர்களை வரவேற்க இராமர் கோவில் தயாராகி விடும்.

வடக்கு பீஹாரில் உள்ள சீதாமர்கி எனும் இடம் சீதை பிறந்த இடமாகும். அங்கு சீதைக்கு பிரமாண்ட கோவில் கட்டப்படும்.

அங்கு ஒரு பல்கலைக் கழகமும் உருவாக்கப்படும். இந்தியாவின் பாரம்பரிய சிறப்பை அந்த பல்கலைக் கழகம் மூலம் தெரிந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும். இவ்வாறு சுப்பிரமணியன் சுவாமி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ரோஹிஞ்யா அகதிகள் பயணித்த படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்து

### 8 பேர் உயிரிழப்பு!



(டாக்கா)

பங்களாதேஷம் அருகே ஆற்றில் படகு கவிழ்ந்து ரோஹிஞ்யா அகதிகள் 8 பேர் உயிரிழந்தனர். ஆற்று நீரில் மூழ்கிய பலரைக் காணவில்லை.

மியன் மாரில் இராணுவ ஒடுக்குமுறை மற்றும் வன்முறை காரணமாக ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக குடிபெயர்ந்த வண்ணம் உள்ளனர். பெரும்பாலான ரோஹிஞ்யாக்கள் பங்களாதேஷத்திற்கு செல்கின்றனர்.

இவர்கள் மியன்மாரையும் பங்களாதேஷத்தையும் பிரிக்கும் நப் ஆற்றில் பாது காப்பற்ற படகு பயணம் மேற்கொள்ளும் போது சில சமயங்களில் விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றனர்.

அவ்வகையில், நேற்று மியன்மாரில் இருந்து தப்பி வந்த ரோஹிஞ்யாக்கள் படகில் பங்களாதேசத்தை நோக்கி வந்தபோது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

படகில் சுமார் 50 பேர் பயணம் செய்ததாகவும், அதில் குழந்தைகள் உட்பட 8 பேர் நீரில் மூழ்கி உயிரிழுந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. 21 பேர் நீந்தி கரை சேர்ந்துள்ளனர். மற்றவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த 6 வாரங்களில் மட்டும் சுமார் 200 ரோஹிஞ்யாக்கள் இதுபோன்று படகு விபத்தில் பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சோ... ப...

### 25...

(மொகா...)

சோமா... உயிரிழந்த... மேற்பட்ட... நாடான சோ... சந்தைகள்... பகுதியில்... வெடித்தன... வீசப்பட்ட... குண்டு... அதிகரித்து... அமைப்பு... இதுபற்றி... தீவிரவாதி... டுள்ளனர்... னார். அ... ஒழிக்க... ஏழ்மையா...

## எத்தனை தேர்தல் வந்தாலும் நாங்கள் வெற்றி பெறுவோம்

### அமைச்சர் செல்லூர் ராஜு நம்பிக்கை



(நெல்லை)

உள்ளூராட்சி தேர்தல், இடைத்தேர்தல் மற்றும் எத்தனை தேர்தல் வந்தாலும் எங்கள் கட்சி அமோக வெற்றி பெறும் என அமைச்சர் செல்லூர் ராஜு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழக அரசு சார்பில் மாவட்டம் தோறும் எம்.ஜி. ஆர். நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நெல்லை மாவட்டம் சார்பாக அடுத்த மாதம் 12ஆம் திகதி பாளை பெல் மைதானத்தில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

இதற்கான கால்கோள் விழா நேற்று பாளை பெல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, கழக ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் இணைந்து வரலாற்றில் இதுவரை இடம்பெறாத அளவுக்கு எம்.ஜி. ஆரின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நெல்லையில் நடைபெறும் விழாவில் தமிழக முதல்வர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். தமிழகத்தில் எங்கள் கட்சிதான் முதன்மையான கட்சியாக உள்ளது. அனைத்து அமைப்பினரும் இங்கு வந்து இணைந்துள்ளார்கள்.

கட்சிக்காக உழைத்தவர்கள் யார் வந்தாலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இது குறித்து ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்கள் தெளிவாக கூறியுள்ளனர். எங்களுக்கு தி.மு.க. மட்டுமே எதிர்க் கட்சி. தமிழக மக்களுக்கு விரோதமான கட்சி தி.மு.க.

தி.மு.க. ஆட்சியில் இருந்த போதெல்லாம் மக்களுக்கு எதிரான திட்டங்களை கொண்டு வந்துள்ளது. எனவே தான் தி.மு.கவை எதிர்க்கிறோம். இன்றும், என்றும் அ.தி.மு.கவுக்கு ஒரே எதிரி தி.மு.க.தான். உள்ளாட்சி தேர்தல், இடைத்தேர்தல் மற்றும் எத்தனை தேர்தல் வந்தாலும் எங்கள் கட்சி அமோக வெற்றி பெறும். 3-வது அணி என்று யார் அமைத்தாலும் அவர்களால் வெற்றி பெற முடியாது. விரைவில் இரட்டை இலைச்சின்னம் எங்களுக்கு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கன்னடர்களுக்கு தனிக்கொடி

### முதல்வர் சித்தராமையா பேச்சு



(பெங்களூர்)

கர்நாடகத்தில் கன்னடர்களுக்கு தனிக்கொடி அவசியம் என்று முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்தார்.

கர்நாடக ரட்சன வேதிகே அமைப்பின ஏற்பாட்டில் மாநாடு பெங்களூரில் நேற்று நடந்தது. இந்த மாநாட்டில் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா உரையாற்றுகையில்,

நான் ஒரு கன்னடன். கன்னட மொழிக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறேன். கன்னட கவிஞர் குவெம்பூ கூறியது போல நீ எங்கிருந்தாலும், எப்படி இருந்தாலும், எதுவாக இருந்தாலும் கன்னடனாக இரு என்று அவர் சொன்னதை மனதில் வைத்து செயற்பட வேண்டும்.

கடந்த 65 ஆண்டுகளாக கன்னடக்கொடி வேண்டும் என்ற பேச்சுவார்த்தைகள் நடந்த வண்ணம் உள்ளன. இது குறித்து ஆலோசனை வழங்குவதற்காக காங்கிரஸ் அரசு கன்னட கொடி அமைப்பு குழுவை உருவாக்கியுள்ளது. கர்நாடகத்தில் கன்னடக்கொடி இருப்பது அவசியமானதாகும். இதற்காக தேசியக் கொடியை நாங்கள் அவமதிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராணுவம்-தீவிரவாதிக...

## 30 பேர் பலி!



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் சினாய் பகுதியிலுள்ள சோதனைச் சாவடிகளில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 24 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எகிப்து நாட்டில் முன்னாள் ஜனாதிபதி முஹம்மது மோர்சி கடந்த 2013 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் பல பகுதிகளில் இஸ்லாமிய தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். குறிப்பாக, செங்கடல் மற்றும் மத்திய தரைக்கடலுக்கு இடையிலுள்ள சினாய் தீபகற்பம் பகுதியில் இந்த தீவிரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

எதிர்பாராத வகையில் வாகனங்களில் கும்பலாக வரும் தீவிரவாதிகள் அரசு அலுவலகங்கள் மற்றும் இராணுவத்தினர் மீது அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த வன்முறையாட்டங்களில் கடந்த 4 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான பொலிஸாரும் இராணுவ வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலை... உட்பட்ட ஷேக்... சாவடிகளின்... மேற்பட்ட தீவி... கையெறி கு... னர். இதில்... தனர். 20 இ... அடைந்ததாக... சண்டையில்... பட்டதாக எகி... டுள்ளது.

## "மெர்சல்" வெளியாவதில் எந்தச்சிக்கலும் இல்லை

### அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவிப்பு



(நெல்லை)

மெர்சல் படம் வெளியாவதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை என நெல்லையில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு கால்கோள் விழாவில் அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார். தமிழக அரசு சார்பில் மாவட்டம் தோறும் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நெல்லை மாவட்டம் சார்பாக அடுத்த மாதம் 12 ஆம் திகதி பாளை பெல் மைதானத்தில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

இதற்கான கால்கோள் விழா நேற்று பாளை பெல் மைதானத்தில் நடைபெற்றது. சிறப்பு அமைப்பாளர்களாக அமைச்சர்கள் செல்லூர் ராஜு, கடம்பூர் ராஜு, ராஜலெட்சுமி, மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எம்.ஜி.ஆர். சம்பந்தப்பட்ட கண்காட்சி நடத்தப்படவுள்ளது. பொதுமக்களுக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகள் வழங்கி புதிய திட்டப் பணிகளை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி வைக்கிறார். நடிகர் விஜய் முதல்வரை சந்தித்தது கேளிக்கை வரி குறைப்பிற்கு நன்றி தெரிவிக்கதான்.

ஏற்கனவே நடிகர் சங்க நிர்வாகிகள் முதல்வரை சந்தித்த போது விஜய் கலந்து கொள்ளவில்லை. எனவே தனியாக இப்போது அவர் முதல்வரை சந்தித்து நன்றி தெரிவித்துள்ளார். 'மெர்சல்' படம் வெளியாவதில் எந்தவித சிக்கலும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 2500 கிலோ வெ... ஆப்கானில் லெ...



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூ... 2500 கிலோ வெடி பொருளுடன் நுழைந்த... முதல் செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி... டுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் தலைந... காபூல் நகரில் கடந்த மே மாதம் இடம்பெ... டுத் தாக்குதலில் 150இற்கும் அதிகமா... உயிரிழந்தனர். இதையடுத்து, நாடு மு... உள்ள முக்கிய பகுதிகளில் கூடுதலாக சோ... சாவடிகள் அமைக்கப்பட்டு, சந்தேகத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# சோமாலியாவில் இரட்டைக் குண்டு வெடிப்பில் ...லியானோர் எண்ணிக்கை 280 ஆக அதிகரிப்பு

## 50 பேர் படுகாயம்

(மொகாதிஷு)

...ாமாலியாவில் இடம்பெற்ற இரட்டைக் குண்டுவெடிப்பு தாக்குதலில் ...ழந்தவர்களின் எண்ணிக்கை 280 ஆக அதிகரித்துள்ளது. 250 இற்கும் ...ட்டவர்கள் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆபிரிக்க ...ா சோமாலியாவின் தலைநகரம் மொகாதிஷு இங்கு ஹோட்டல்கள், ...கள், அரசு அலுவலகங்கள் நிறைந்த மக்கள் நடமாட்டம் உள்ள ...ில் நேற்று முன்தினம் அதிகாலை சக்தி வாய்ந்த குண்டுகள் அடுத்தடுத்து ...தன. இதில் கட்டடங்கள் பல தரைமட்டமாகின. வாகனங்கள் தூக்கி ...ட்டன.

...ண்டுவெடிப்பில் உடல் சிதறி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 280ஆக ...த்துள்ளது. அல்கொய்தா அதரவு பெற்ற அல்-ஷபாப் என்ற தீவிரவாத ...ப்பு தான் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணம் என கூறப்படுகிறது. ...றி கூறிய சோமாலிய ஜனாதிபதி முகமது அப்துல்லாஹி பெர்மஜோ, ...ாதிகளின் கொடூரத் திட்டங்களை மக்கள் இப்போது புரிந்து கொண் ...னர். இரக்கமில்லா தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிப்பதாக அவர் கூறி ...அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு எதிராக செயற்படும் தீவிரவாதிகளை ...க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார். உலகின் மிகவும் ...மயான நாடுகளில் ஒன்று சோமாலியா என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## ...கள் மோதல்



...லையில், சினாய் தீபகற்பம் பகுதிக்கு ...ஷேக் சுவேத் நகரத்திலுள்ள சோதனைச் ...ன்மீது நேற்று முன்தினம் 100 இற்கும் தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி ...ல் ஆறு இராணுவத்தினர் உயிரிழந் ...) இற்கும் மேற்பட்ட வீரர்கள் காயம் ...தாக கூறப்படுகிறது. இந்த துப்பாக்கிச் ...யில் 24 தீவிரவாதிகளும் கொல்லப் ...ஏகிப்து இராணுவம் செய்தி வெளியிட் (இ-7)

# வடகொரியா முதல் குண்டு போடும்வரை இராஜதந்திர முயற்சிகள் தொடருமாம்

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் டில்லர்சன் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அணு ஆயுதங்களை வைத்துக்கொண்டு மிரட்டி வரும் வடகொரியா முதல் குண்டு போடும் வரை இராஜதந்திர முயற்சிகள் தொடரும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் டில்லர்சன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு ஐ.நா. விதித்துள்ள பொருளாதாரத்தடைகளையும் மீறி வடகொரியா அணு ஆயுத சோதனையை நடத்தி கொரிய தீபகற்பத்தில் போர்பதற்றத்தை உருவாக்கி வருகிறது. இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்து எச்சரிக்கையும் விடுத்தது. இதனால் வடகொரியாவின் கோபம் அமெரிக்கா மீது திரும்பியுள்ளது. இரு நாடு களுக்குமிடையே வார்த்தைப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வடகொரியாவுடன் பேச் சுவார்த்தைக்கான வாய்ப்பை எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் கூறினார். இதனால் மோதல்போக்குமுடிவுக்குவரும் என எதிர்பார்க் கப்பட்டது.

ஆனால், வடகொரிய ஜனாதிபதியுடன் பேச்சுவார் த்தை நடத்தி ரெக்ஸ் டில் லர்சன் நேரத்தை வீணாக்கு வதாக ஜனாதிபதி ட்ரம்ப் கூறியதால் பேச்சுவார்த் தைக்கான முகாந்திரம் இப் போதைக்கு இல்லைஎன்றேஆய்வாளர்கள் தெரிவித்தனர். இந்த சூழ்நிலையில், வடகொரியாவுடனான மோதலை அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப் இராஜதந்திர முறைப் படியே தீர்க்க விரும்புவதாக ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்துள் ளார். வடகொரியா முதல் குண்டு போடும் வரை இந்த இராஜ தந்திர முயற்சிகள் தொடரும் என்று சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். தடைகளும் இராஜதந் திரமும் வட கொரியாவின் அணுஆயுத திட்டங் களுக்கு எதிராக முன்னெப் போதும் இல்லாத அளவு ஒற்றுமையை உருவாக்கியுள்ளது என்றும் அவர் கூறி னார்.



ட்ரம்ப் ஒரு முட்டாள் என்று டில்லர்சன் கூறியதாக ஊடகங்களில் தொடர்ந்து விமர்சனங்கள் முன்வைக் கப்படுகின்றன. இதனை மறுத்த டில்லர்சன், நவீன வரலாற்றில் ட்ரம்ப் மிகவும் தனித்துவமான ஜனாதிபதி என்பதில் எனக்கு எந்த சந் தேகமும் இல்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

## ...வெடிபொருளுடன் ...லொறி பறிமுதல்



...ாபூலுக்குள் ...த லொறி பறி ...ரியை ஏற்ப ...லநகரமான ...பெற்ற குண் ...ானவர்கள் ... முழுவதும் ...சோதனைச் ...த்துக்குரிய வாகனங்களை பொலிஸார் தீவிரமாக சோதனை செய்து வருகின்றனர். இந்நிலையில், தலைநகர் காபூல் மீது லொறி குண்டு தாக்கு தல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக தேசிய பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

நேற்று முன்தினம் காபூல் நகர எல்லைப்பகுதிகளில் வாகன சோதனை நடைபெற்றபோது வேகமாக வந்த ஒரு லொறியை மடக்கி சோதனையிட பொலிஸார் முயன்றனர். பொலிஸாரை மோதுவதுபோல் வேக மாக லொறியை ஓட்டி வந்த நபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றபோது பொலி ஸார் மடக்கி பிடித்தனர்.

அந்தலொறியைசோதனையிட்டபோது தக்காளி பெட்டிகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2500 கிலோ அளவிலான வெடிபொருட்களையும், பயங்கரமான வெடி குண்டுகளையும் கண்டுபிடித்த பொலிஸார் அவற்றை பறிமுதல் செய்தனர். உரிய நேரத்தில் அந்த லொறியை மடக்கிப் பிடித்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாக காபூல் நகர பொலிஸ் தலைவர் தெரிவித்தார். (இ-7)

# பேரறிவாளனின் பரோலை மீண்டும் நீடிக்கக்கூடாது

## தமிழக காங்கிரஸ் எதிர்ப்பு

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை கைதியான பேரறிவாளனுக்கு மீண்டும் பரோல் நீடிப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் சென்னையில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் காங்கிரஸ்க்கு 25 இலட்சம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டுக்குள் 50 இலட்சம் ஆக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளோம். பஞ்சாப், கேரளா, இடைத் தேர்தல் முடிவின் மூலம் தென் கோடியில் இருந்து வடகோடி வரை மோடிக்கு எதிரான அலை உருவாகி இருப்பது தெரிய வந்துள்ளது. ஜி.எஸ்.டி வரி விதிப்பு மூலம் மக்களிடையே அதிருப்தியும், மனச் சோர்வும் தான் ஏற்பட்டுள்ளது. எனவே, வருகிற பாராளுமன்ற தேர்தலில் ராகுல்தான் பிரதமர் ஆவார் என்பது உறுதியாகி விட்டது. தமிழகத்தில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதில் மத்திய, மாநில அரசு கள் தவறிவிட்டன. மத்திய அரசு போர்க்கால நடவடிக்கைஎடுத்துமருத்துவகுழுவை அனுப்பியிருக்க வேண்டும்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. போட்டியிடும். அமோக வெற்றி பெறும். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை கைதியான பேரறிவாளனுக்கு மீண்டும் பரோல் நீடிப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. தமிழக அரசு தனக்குள்ள உரிமைகளை தவறாக பயன் படுத்தக் கூடாது.

காங்கிரஸ் அமைப்பு தேர்தல் நடந்து முடிந்துள்ளது. தலைவர் மாற்றப்படலாம் என்றெல்லாம் பல் வேறு வதந்திகள் பரப்பப்படுகின்றன. கட்சியில் எந்த பிரச்சினையும் இல்லை. டில்லியில் நானும் இளங்கோவனும் ராகுல் காந் தியை தனித்தனியாக சந்தித்து விட்டு தான் வந்தோம். யார் தலைவர் என்பதை கட்சி மேலிடம் தான் முடிவு செய்யும். இவ்வாறு அவர் கூறினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் குற்றங்களை அம்பலப்படுத்துவதற்கே அரசியலில் இறங்கினேன்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தனது பிரதான எதிரியான மகிந்த ராஜபக்ஷவின் குற்றங்களை அம்பலப்படுத்துவதற்காகவே அரசியலில் நுழைந்து அமைச்சர் பதவியைப் பெற்றதாக, அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.




கிரிபத்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஐ.தே.கவின் கிளை ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே சரத் பொன்சேகா இவ்வாறு கூறியுள்ளார்.

" ஒரு சிறிய கட்சியின் ஊடாகவே நான் அரசியலுக்குள் நுழைந்தேன். அதனால் ஒரு அரசாங்கத்தை நிறுவ முடியாது. அது எனக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ செய்த குற்றங்களை உலகத்துக்கு கூறுவதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை நான் அறிவேன்.

அரசியலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான கருத்தை உருவாக்குவதற்கு, அந்த சிறிய கட்சி தான் எனக்கு தளமாகப் பயன்பட்டது.

2010 நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கவில் களனிய தொகுதியில் போட்டியிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார்.

அப்போது, அங்கிருந்த குண்டர் அரசியல்வாதிகளுடன் போட்டியிட நான் விரும்பவில்லை.

2015இல் மகிந்த ராஜபக்ஷ குருநாகலவில் போட்டியிட்ட போது, அங்கு போட்டியிட முன்வருமாறு மீண்டும் அழைத்திருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

குருநாகல் மாவட்டத்தில் பெருமளவு வலுவான ஐ.தே.க. தலைவர்கள் உள்ளனர். அங்கு போட்டியிட நான் விரும்பவில்லை.

பின்னர் நான் களனிய தொகுதி அமைப்பாளர் பதவியை ஏற்றுக் கொண்டேன். நாடாளுமன்ற ஆசனத்தைப் பெறுவதோ சிறப்பு வசதிகளை அனுபவிப்பதோ எனது பயணத்தின் நோக்கம் அல்ல. மகிந்த ராஜபக்ஷவை அம்பலப்படுத்துவதே எனது நோக்கம்.

நாடு முழுவதும் சென்று மகிந்த ராஜபக்ஷ செய்த குற்றங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டும் என்பதே எனது இலக்கு" என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 'அரசியல் விளையாட்டுக்காகவே நாமல் போராடினார்'-ஹரீன் விசனம்

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவையும் மீறி அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அரசியல் விளையாட்டை மனதில் வைத்துக் கொண்டே ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சென்றார் என டிஜிற்றல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பத்தேகமவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# இலங்கை இராணுவத்தின் காட்சிக்காக இந்திய இராணுவத்தின் ஆயுதங்கள்





(கொழும்பு)

புனேயில் நடைபெற்று வரும் இந்திய- இலங்கை இராணுவத்தினர் பங்கேற்கும், 'மித்ரசக்தி' கூட்டுப் பயிற்சியில், இந்திய இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள ஆயுதங்கள். இலங்கை படையினருக்காக காட்சிப்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய- இலங்கை இராணுவத்தினர் பங்கேற்கும் 'மித்ரசக்தி' கூட்டுப் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை புனேயில் உள்ள 2 ஆவது மராத்தி காலாட்படை பற்றாலியன் மைதானத்தில் ஆரம்பமானது. இதில் இலங்கையில் இருந்து சென்ற சிங்களப் படைப்பிரிவின் அணியினரும் இந்திய இராணுவத்தினரும் இணைந்து அணிவகுப்பில் பங்கேற்றனர்.

[illegible] படைப்பிரிவின் பாரம்பரிய நடனமும், இலங்கை இராணுவத்தின் கண்டிய நடனமும் இடம்பெற்றன. இந்த தொடக்க நாள் நிகழ்வில், இந்திய இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள ஆயுதங்கள் மற்றும் கருவிகள் இலங்கை படையினருக்கு காட்சிப்படுத்தப்பட்டன. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தவணை முறையில்...

மற்றவர்கள் கேட்கும் உதவிகளில் நம் இயலாமைகளை உடனடியாகத் தெளிவுபடுத்தி விடுவது தான் நல்லது. ஆனால் இதை உதவி கேட்பவர்களின் மனம் புண்படாதபடி தெரிவிப்பது என்பது அதைவிட முக்கியம்.

நம்மையே மிகவும் நம்பி வருகிறவர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் நம்மால் நிச்சயமாக உதவ இயலாது என்கிற நிலை. உடனே இதைத் தெரிவித்தால் ரொம்பவும் மனமுடைந்து போவார்கள். அதுமட்டுமல்ல நமக்குச் சிறிதளவுகூட இரக்கமே இல்லை என்றும் உதவும் மனப்பான்மை அறவே இல்லை என்றும் பிரசாரம் செய்வதோடு மட்டுமன்றி நம்மைவிட்டு விலகிப் போகவும் முடிவு செய்து விடுவார்கள்.

எனவே இத்தகையவர்களிடம் மட்டும் உடனடியாக நம் இயலாமையைத் தெரிவிக்கக்கூடாது.

படிப்படியாகத்தான் தெரிவிக்க வேண்டும். குறிப்பாக நாம் செய்ய முடியாத அல்லது நாம் மற்றவர்களிடம் சிபாரிசு செய்து முடித்துத் தரக்கூடிய வேலைகளில் தவணை முறையில்தான் நம் இயலாமையைத் தெரிவிக்கவேண்டும்.

அவருகிட்டே சொல்லி ஒரு வேலை போட்டுத் தரச் சொல்லுங்க என்று ஒருவர் அணுகினால் ஏற்கனவே சொன்ன இரு ஆட்களுக்கு இன்னும் வேலை கிடைக்கலை. இருந்தாலும் உங்களுக்காக முயற்சி செய்தேன் என்று இலேசாகக் காற்றை இறக்கிவிட வேண்டும்.

மாறாக ஒரேயடியாக ஊசி கொண்டு குத்தி அந்த நம்பிக்கைப் பலூனை உடனே வெடிக்க வைத்து விடக்கூடாது.

அப்படிச் செய்தால் கேட்கிறேன் பார்க்கிறேன் என்றுகூடச் சொல்லாமல் உடனே வெட்டி விட்டுட்டாரு என்று இவர்கள் புகார்ப்புராணம் பாட ஆரம்பித்து விடுவார்கள்.

அல்லது இவரு போய்க்கேட்டா நிச்சயம் அவரு செய்வாரு இவருக்குத்தான் மனசே இல்லை என்பார்கள்.

ஏங்க நாங்களும் உங்களோட கார்ல மெட்ராஸ் வர்றமே என்றார் ஓரளவு அறிமுகமான நண்பர் இடம்: திருக்கழுக்குன்றத்தில் ஒரு திருமணவீடு. காரில் உட்கார்ந்து பார்ப்போம். அட்ஜஸ்ட் பண்ணிப் போக முடியுமானால் போயிடுவோம் என்றேன்.

உடன் வந்த நண்பர் சற்றே எரிச்சலடைந்து கேட்டார். ஏம்பா நாமே கஷ்டப்பட்டு இடுக்கி உட்கார்ந்துக்கினு வந்தோம் அந்தாளுங்களை வேறு எப்படிப்பா ஏத்திக்கிறது? அங்கேயே முடியாதுன்னு சொல்ல வேண்டியதுதானே? என்றார்.

உடனே சொன்னா தவிர்க்கிறோம்னு நெனைப்பார். உட்கார்ந்து காண்பித்தால் அவரே புரிந்து கொள்வார் என்றேன். எல்லாரும் வாசலுக்கு வந்தோம். ஆட்களின் எண்ணிக்கையைப் பார்த்தார் உடன்வர எண்ணியவர் நீங்க போயிட்டு வாங்க நாங்க பஸ்லேயே வர்றோம் என்றார். விஷயம் சுமுகமாக முடிந்தது.

அப்போதே தவிர்த்திருந்தால் நாளை எங்காவது பார்த்தால்கூட வேறு பக்கம் திரும்பிக் கொள்வார். ஏன் இந்தப் பொல்லாப்பு?

தவணை முறையில் தவிர்ப்பதில் இன்னும்கூடச் சில நுணுக்கங்கள் இருக்கின்றன. முதல் கட்டமாக வாய்ப்பு என்பது 50 % அப்படியும் அமையலாம் 50% இப்படியும் இருக்கலாம் என்கிற நிலைமைக்கு அவர்களைக் கொண்டு வர வேண்டும்.

அடுத்து மேலும் 25 சதவிகித நம்பிக்கையைக் குறைக்கும் அளவில் நாமே நேரில் சென்றோ கடிதம் மூலமோ தெரிவித்து விட வேண்டும். அல்லது பிறர் மூலம் சொல்லி அனுப்பிவிடலாம் . மற்ற 25% பற்றி அவர்களே முடிவுக்கு வந்துவிடுவார்கள்.

இத்தகைய தவணை முறையில் உள்ள முக்கிய விதி அவர்களை அலையவிடக் கூடாது. இழுத்தடிக்கக்கூடாது என்பதுதான்.

இவருக்கு உதவ மனமிருக்கிறது. பாவம் சூழ்நிலை இடந்தரவில்லை என்றோ நமக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றோ அவர்களை நம்பவைத்து விட்டால் போதும். நம் தலை தப்பிவிடும்.

**லேனா தமிழ்வாணன்**

# அரசியல் அமைப்பு உருவாக்க பணியிலிருந்து விலகக் கூடாது

## அஸ்கிரிய மகாநாயகர் அறிவுரை



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளிலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்வது நியாயமற்றது என அஸ்கிரிய பீடாதிபதி வராகொட ஞானரட்ன தேரர் தெரிவித்துள்ளார். அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அஸ்கிரிய பீடாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

"நாட்டுக்கு பொருத்தமான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக பரிந்துரைகள், ஆலோசனைகளை முன்வைக்கு அரசியல் அமைப்புச் சபையிலிருந்து விலகிக் கொள்வதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

நாட்டுக்கு பாதகமான விடயங்கள் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அதனை சுட்டிக்காட்டுவதற்கு அரசியல் அமைப்புச் சபையில் அங்கம் வகிப்பது அவசியமாகின்றது.

புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் வெளியில் இருந்து கொண்டு பல்வேறு கருத்துக்களை வெளியிடுவதில் எவ்வித பயனும் கிடையாது.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்குவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது.

அதனைவிடுத்து, அரசியல் அமைப்புச் சபையிலிருந்து விலகிக் கொள்ள தீர்மானிப்பது பொருத்தமான தீர்வாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# அநீதிகளை முஸ்லிம் நாடுகள் தட்டிக்கேட்குமென நாம் நம்பிக் கொண்டிருப்பது மடமைத்தனம்

## அமைச்சர் றிசாத் அதிருப்தி



(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்களுக்கு இன்னல்களும், பிரச்சினைகளும் ஏற்படும் போது, அரபுலக நாடுகளும், முஸ்லிம் நாடுகளும் கைகொடுத்து உதவுமென்று நாம் நம்பிக்கை கொண்டிருப்பது மடமைத்தனமானதெனவும், ரோஹிஞ்யா முஸ்லிம்களின் அவலங்கள் நமக்கு நல்ல படிப்பினையாக அமைந்துள்ளதெனவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

திஹாரிய ஈமானிய அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர், பட்டம் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும் போது, முஸ்லிம் நாடுகள் வளமாகவும் பலமாகவும் இருக்கின்ற அதேவேளை, உலக நாடுகளில் சிறுபான்மையாக வாழும் நமது சமூகத்தவர்களுக்கு, பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்கள் தட்டிக் கேட்பார்கள் என்று எவரும் எதிர்பார்க்கவேண்டாம்.

அவ்வாறான ஆளுமையும், துணிவும் இந்த நாடுகளுக்கு இருந்திருந்தால், ரோஹிஞ்யாக்கள் குத்தப்பட்டும், குதறப்பட்டும், குற்றுயிராக அகதிகளாக விரட்டி அடிக்கப் பட்டுக்கொண்டிருக்கும்போதும் உதவியிருக்க முடியும்.

அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற சதிகாரர்களின் ஆலோசனைகளுடன் இன்று உலகமெல்லாம் அழிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முஸ்லிம் நாடுகளுக்கிடையே திட்டமிட்டு பிளவுகளும், பிரிவினைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று ஒரே நாட்டுக்குள்ளே பிரச்சினைகள் உருவாக்கப்பட்டு சமூகங்களை மோதவிடும் மிகப் பெரிய கைங்கரியம் இன்று இடம்பெற்று வருகின்றது.

இந்தவகையில், இலங்கை முஸ்லிம்களாகிய நாம் மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் நடந்து கொள்ளவேண்டும். மார்க்க ரீதியிலோ கொள்கை ரீதியிலோ பிளவுண்டு நமது ஒற்றுமைக்கு நாமே வேட்டு வைத்து நமக்கிடையே மோதிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமுதாய ஒற்றுமையை குலைக்க எவரும்துணைபோகக்கூடாது.

சமூகம் சார்ந்த பல்வேறு கட்சிகள் அரசியல் செய்கின்ற போதும் சமுதாயத்திற்கு பிரச்சினை என்று வரும் போது, அவர்கள் தமது பேதங்களை மறந்து ஒன்றுபட்டுச் செயலாற்றியிருப்பது கடந்தகால வரலாறு. தற்போதும் அவ்வாறு தான் செயற்படுகின்றனர்.

இலங்கைப் பிரஜை ஒருவர் எந்தக் கட்சியிலும் உறுப்புரிமை கொண்டிருக்கலாம், எவருக்கும் வாக்களிக்கலாம், தான் விரும்பிய எவருக்கேனும் பிரசாரம் செய்ய முடியும். ஒருவரின் வாக்குரிமை உட்பட அடிப்படை உரிமைகளில் கைவைக்க எந்தச்சட்டத்திலும் இடமில்லை. அரசியலமைப்பு சட்டத்தில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு நமது சமூகம் பாரிய பங்களிப்பை நல்கியுள்ளது. உலமாக்கள் கல்விமான்கள், தாய்மார்கள், பெட்டிக்கடை வியாபாரிகள், தேநீர்க்கடை வியாபாரிகள், நாட்டாமை என்ற பேதங்களின்றி, எல்லோரும் ஒன்றுபட்டுக் கடந்த ஆட்சியை மாற்றுவதற்கு தமது முழு நேர பங்களிப்பையும் நல்கி மாற்றத்தை உருவாக்கியதை எவரும் இலகுவில் மறந்து விட முடியாது.

அதுமட்டுமன்றி, சொத்துக்கள், பணம் மற்றும் நேர காலம் பாராமல் அனைத்தையும் நாம் செலவழித்திருக்கின்றோம். தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆட்சிக்கு வருவோம் எனக் கனவிலும் நினைத்திராத இப்போதைய ஆளுங் கட்சிக்காரர்கள் ஆட்சிக் கட்டிலுக்கு வருவதற்கு நாம் வழங்கிய பங்களிப்பை அவர்கள் கொச்சைப்படுத்தக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அரிசிக்குக் கட்டுப்பாடு விலை விதிக்கப்படவுள்ளதாக வணிகத்துறை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கைச் செலவு குழுக் கூட்டத்தின்போது இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டரிசி ஒரு கிலோவுக்கு 74 ரூபாவும் சம்பா ஒருகிலோவுக்கு 85 ரூபாவாகவும் அதிகூடிய சில்லறை விலையாக நிர்ணயிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (இ-7)

# இலங்கை வருகிறார் தெஹ்மினா ஜானுவா




(கொழும்பு)

பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் தெஹ்மினா ஜானுவா (Tehmina Janjua) இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஓமானுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவர் அப்பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கைக்கு பயணமாகவுள்ளதாக பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக்கொள்வது தொடர்பில் இந்தப் பயணத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் இலங்கையிலுள்ள அரச தலைவர்களைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிசுவின் சடலத்தை தூக்கிச் சென்ற நாய்



(கொழும்பு)

நுவரெலியா சினிசிட்டா மைதானத்திலிருந்து நேற்று முன்தினம் சிசுவின் சடலம் ஒன்றை நாய் தூக்கிச் சென்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

ஆட்டோ சாரதி ஒருவரினால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து நுவரெலியா பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சீனாவுக்கு செக் வைக்கும் அமெரிக்கா

இலங்கைக் கடற்படை மற்றும் அமெரிக்க பசுபிக் கப்பற் படை ஆகியன இணைந்து கடந்த வாரம் திருகோணமலையில் கடல் நடவடிக்கைக்கான தயார்ப்படுத்தல் மற்றும் கூட்டுப் பயிற்சியில் (CARAT) ஈடுபட்டன.

அமெரிக்க பசுபிக் கப்பற் படையினர் 23 ஆவது தடவையாக இக்கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்ட போதிலும் இலங்கையுடன் முதன் முதலாக இவ்வாண்டே இப்பயிற்சி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்கு முன்னர் அமெரிக்க பசுபிக் கப்பற் படையினர் சில ஆசிய நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்து இரு தரப்பு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பயிற்சி நடவடிக்கையானது அமெரிக்கப் படையினருக்கும் மற்றைய நாடுகளின் இராணுவத்தினருக்கும் இடையில் ஒத்துழைப்பு மற்றும் இராணுவ உபகரணங்கள் மற்றும் ஆளணிகளுக்கிடையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான வழியை மேலும் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

குறிப்பாக இராணுவ நடவடிக்கைத் திட்டமிடல், கட்டளையிடல் மற்றும் கட்டுப்படுத்தல், மூலோபாயங்கள் போன்ற பல்வேறு துறைகளிலும் அமெரிக்கப் படையினருக்கும் இக்கூட்டுப் பயிற்சியில் ஈடுபடும் நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இதன் நோக்காகும். இந்த வகையில் இத்தடவை இலங்கை இராணுவத்துடன் நல்லுறவைக் கட்டியெழுப்புதல் மற்றும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.










சிலரால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களைப் பேரல, இலங்கையில் வாழும் சமூகத்தவர்கள் மத்தியில் இராணுவமயமாக்கலை ஊக்குவித்தல் அல்லது உறுதிப்படுத்தும் நோக்குடன் இக்கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படவில்லை. இலங்கையைத் தனது நட்பு நாடாக வைத்திருக்க வேண்டிய நிலையில் அமெரிக்கா உள்ளது.

ஏனெனில் இலங்கையில் சீனா தனது இராணுவ உறவை விருத்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவதால் அமெரிக்கா அச்சம் கொண்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காகவே தற்போது அமெரிக்க பசுபிக் கப்பற் படையினர் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டமானது கணிசமானளவு இராணுவ அல்லது பாதுகாப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளதால் வரும் ஆண்டுகளில் இலங்கை இராணுவத்தினர் சீனாவுடன் நெருக்கமான இராணுவ உறவை விரிவுபடுத்த வேண்டிய நிலையேற்படும்.

ஓகஸ்ட் முதலாம் திகதியன்று சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் 90ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்காக கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட வாழ்த்துச் செய்தியில் "சீன இராணுவமானது இலங்கை இராணுவத்துடன் உறவைக் கட்டியெழுப்புவதில் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. இராணுவக் கற்கைநெறிகள், இராணுவப் பயிற்சிகள், கடற்பாதுகாப்பு போன்றன உள்ளடங்கலாக சீனா மற்றும் இலங்கை இராணுவத்தினர் தமக்கிடையே முழுமையான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் சீனா ஆர்வமாக உள்ளது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சீனா தனது ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தை ஒரு பொருளாதார நோக்கமாக எப்போதும் விபரிக்கின்ற போதிலும், சீனாவின் பாதுகாப்பு மூலோபாயங்கள் தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்கும் எவரும் சீனாவின் இத்திட்டமானது முற்றிலும் தேசிய பாதுகாப்பு எண்ணக்கருவை நோக்காகக் கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இதற்கும் மேலாக, சீனா தனது அரசியல் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களை தனது ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தின் ஊடாகச் செயற்படுத்த விரும்பவில்லை எனின், இது புதிய பாதுகாப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்கும். ஒரு நாட்டின் பொருளாதார செல்வாக்கானது பிறநாடுகளில் விரிவுபடுத்துவதற்கு தன்னால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் நிச்சயமானவையா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

ஏனைய நாடுகள் மீதான சீனாவின் செயற்பாடுகள் சீனாவின் பாதுகாப்பு விளைவுகளை வெளிப்படுத்துகின்றன. அதாவது சீனாவின் வெளிநாட்டு இராணுவச் செயற்பாடுகள் 2000 தொடக்கம் அதிகரித்துள்ளது. 2004இல், சீன ஜனாதிபதி கூ ஜின்ரவோ சீனாவின் 'அனைத்துலக நலன்கள்' தொடர்பாக முதன்மைப்படுத்தியிருந்தார். இதில் வெளிநாடுகளில் பணிபுரியும் சீனர்கள், சீன நிறுவனங்கள், கம்பனிகள், முதலீடுகள், மூலோபாய கடல் வழிப்பாதைகள் மற்றும் வெளிநாடுகளுடனான தொடர்பாடல் வழிகள், சக்தி மற்றும் வளங்கள் போன்றன பாதுகாப்பாக உள்ளதை உறுதிப்படுத்துவதே சீனாவின் அனைத்துலக நலன்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது இவை சீனாவின் அனைத்துலக அடிப்படை பொருளாதார நலன்களாக உள்ளன. எனினும் சீனா அனைத்துலக நாடுகளில் தனது அரசியல் மற்றும் இராணுவ நலன்களை விரிவுபடுத்துவதற்கான சான்றுகளும் உள் என. இவை சீனாவின் தேசிய நலன்களின் ஒருங்கிணைந்த கூறாக உள்ளது என சீனாவின் பாதுகாப்பு ஊடகமானது 2013இல் குறிப்பிட்டிருந்தது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் மூலோபாயப் பணிகளில் ஒன்றாக சீனாவின் அனைத்துலக நலன்களைப் பாதுகாத்தல் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சீனாவின் இராணுவ மூலோபாயம் 2015இல் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில்சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டமானது புதிய பாதுகாப்பு ஆபத்தை ஏற்படுத்தும். ஏனெனில் இது சீனாவின் பாதுகாப்பு, அரசியல் மற்றும் இராணுவ நலன்களைக் கொண்டுள்ளது. அனைத்துலக நாடுகளில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும் சீனா ஈடுபடப் போவதாக சீனா அறிவித்துள்ளது.

சீனா தனது பங்காளி நாடுகளுடன் இரு தரப்பு மற்றும் பல தரப்பு முறைகளின் ஊடாகப் பாதுகாப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்தி வருகிறது. இராணுவ உபகரணங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிகளின் ஊடாக சீனாவானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

சீனாவின் ஒரு அணை ஒரு பாதைத் திட்டத்தின் ஊடாக இலங்கையில் சீனா தனது இராணுவ உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது. இதில் கூட்டு இராணுவ நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன.

இந்நிலையில் சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கை முறியடிப்பதற்காகவே தற்போது அமெரிக்கா கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது என்பது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

அமெரிக்கா தனது படை வீரர்களின் அதிக மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பதை இலங்கையில் வாழும் பொதுமக்களுக்கு காண்பிக்க விரும்பியது என்பதற்கான சாட்சியமும் உள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட கூட்டுப்பயிற்சி தொடர்பான ஒளிப்படங்களில் அமெரிக்க வீரர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஆப்கானிஸ்தானில் அல்லது ஈராக்கில் உள்ள அமெரிக்க வீரர்கள் தொடர்பான ஒளிப்படங்கள் அவர்கள் அறிவியல் புனைகதைகளில் வரும் படை வீரர்கள் போல் காட்சியளிப்பதைப் பார்க்கலாம். அதாவது இந்த வீரர்கள் கறுப்புக்கண்ணாடிகள் அணிந்தவாறு உயர் ரக யுத்த ஆயுதங்களைக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

இலங்கையர்களின் மனங்களை வெல்வதற்காகவே திருகோணமலையில் இடம்பெற்ற 2017 கூட்டுப்பயிற்சியில் பங்குபற்றிய அமெரிக்க வீரர்களின் ஒளிப்படங்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்கின்ற வெளிப்பாட்டின் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் மத்தியில் நிலவும் அமெரிக்கர்கள் தொடர்பான ஆழமான விரோதம் மற்றும் அவநம்பிக்கை போன்றவற்றை அமெரிக்காவால் மீண்டும் வெல்ல முடியும் என நான் நம்பவில்லை.

ஆனால் சீனர்கள் பல இயற்கையான நல்வாய்ப்புக்களைக் கொண்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக, டுவிட்டரில் இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை விமர்சிக்காதவர்களுடன் சீனர்கள் சிறந்த தொடர்பைக் கொண்டுள்ளனர். அமெரிக்காவானது சீனாவுடனான நீண்ட நாள் ஆட்டத்தைத் தொடர்வதில் தனக்கு பொறுமையில்லை என்பதைத் தொடர்ந்தும் காண்பித்து வருகிறது.

ஆனால் அமெரிக்கா தனது ஆட்டத்தை இலங்கையில் சரியாக ஆடினால் அமெரிக்கா தனக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை யார் அறிவார்கள்?

வழிமூலம் - Ceylon today
ஆங்கிலத்தில் - Rathindra Kuruwita
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைய வேண்டும் கிழக்கு தரமுயர்த்தப்பட வேண்டும்

## கருணாவின் நிலைப்பாடு இது


(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இணைந்திருக்க வேண்டும். அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தை தரமுயர்த்த வேண்டும் என்பது எங்களது நோக்கம் என கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் மீள்குடியேற்ற பிரதியமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் மாதுரோயா திட்டம் என்னும் பெயரின் கீழ் பாரிய நில அபகரிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவருக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ மாகாண சபை உறுப்பினர்களுக்கோ எதுவும் தெரியாது எனவும் அவர்கள் பாராளுமன்றத்திற்கு சென்று நித்திரை தூங்கி விட்டு வருகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்று கல்வியிலும் பொருளாதாரத்திலும் படிப்படியாக முன்னேறிவரும் நிலையில் இதனை தடுக்காவிட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முற்று முழுதாக பாதிக்கப்பட்டு மேலும் வறுமையான நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை யேற்படும்.



அதேநேரத்தில் நான் இந்தியாவில் இருந்தது என்பது ஒரு தவறான விடயம். போராட்ட காலத்தில் தலைமறைவாகி இருந்தது என்பதுதான் உண்மையான விடயம். எங்கு இருந்தது. எவ்வாறு இருந்தது என்று நான் கூற விரும்பவில்லை. சட்டத்துக்கு முரணான பிரதேசத்திலேயோ நாடுகளிலோ இருக்கவில்லை என நான் தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது எமது கட்சி அடிப்படை கொள்கையாக வைத்து இருக்கின்றோம். அது கட்டாயம் இணைக்கப்படவேண்டும். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. ஆனால் சிலர் கேட்க முடியும் ஏன் கருணா அம்மான் அமைச்சராக இருக்கும் போது இதை பேசவில்லை என்று. உங்களுக்கு தெரியும் ஒரு தேசிய கட்சியில் உப தலைவராக இருந்த பொழுது அந்தக் கட்சியின் கொள்கையில் திட்டம் இல்லை. அதனால்தான் எனது பதவியைத் தூக்கி எறிந்து விட்டு வந்து எமது தமிழர்களின் நலனுக்காகவும் வடக்கு-கிழக்கு இணைய வேண்டும் என்பதற்காகவும் தான் கட்சியை ஆரம்பித்துள்ளேன்.

இருந்தாலும் கிழக்கு மாகாணம் தனித்துவமாக இருக்க வேண்டும் என்பதை நான் ஏற்று கொள்கின்றேன். ஏனென்றால் வடக்கு- கிழக்கு இணைந்து இருக்க வேண்டும். அதே நேரத்தில் கிழக்கு மாகாணத்தை தரமுயர்த்த வேண்டும் என்பது எனது கோரிக்கை. ஏனென்றால் வடமாகாணத்தை ஒப்பிடுகின்ற போது கல்வியிலும் பொரீருளாதாரத்திலும் எமது கிழக்கு மாகாணம் பின்தங்கியுள்ளது.

ஆகவே இந்த பின் தங்கிய எமது மாவட்டத்தை பற்றி பொதுவாக கதைப்பது உண்மை.

ஏனென்றால் வடக்கில் வாழும் பெரும்பான்மை மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தை ஒப்பிடுகின்றபோது 2 வீதமான மக்களே புலம் பெயர்ந்துள்ளனர்.

சிவநேசதுரை சந்திரகாந்தன், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகள் தற்போது நடந்து வந்துகொண்டு இருக்கின்றன. விசாரணை முடியும் வரை எதுவும் கூறுவது சிறந்தது அல்ல. காரணம் தற்போது நீதிமன்றத்தில் அவர்களது விசாரணை இடம் பெற்று கொண்டு வருகின்றன.

நீதிமன்றம் உண்மையில் அதை பரிசீலிக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள். இருந்தாலும் இலங்கையின் சட்டத்தின் படி ஒரு கொலைக் குற்றத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டால் ஆறு மாதங்களின் பிற்பாடு அவர்கள் பிணையில் செல்ல வேண்டும. ஆனாலும் இதன் உள் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. ஆனாலும் நீண்டகாலம் அவர் சிறையில் இருக்கின்றார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### சுற்றறிக்கையால் அதிபர்களுக்கு சிரமம்

(கொழும்பு)

மாணவர்களை முதலாந் தரத்துக்கு பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பான கல்வி அமைச்சின் இறுதி நேர சுற்றறிக்கை தொடர்பாக தெளிவூட்டப்படாமையினால் பாடசாலை அதிபர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே உள்ள சுற்று நிருபம்மற்றும்சட்டதிட்டங்களின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சையை நடத்தி, முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் தற்காலிக பெயர்ப் பட்டியலை அதிபர்கள் தயாரித்துள்ள நிலையில், அதிபர்களுக்கு புதிய அறிவுறுத்தல்களை வழங்கும் புதிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கும் முறை தொடர்பாக சுற்றுநிருபத்தின் 7.1.3 பகுதியை நீக்குவதற்கு கல்வி அமைச்சு புதிய சுற்று நிருபத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த ஜூலை மாதம் வெளியிடப்பட்ட பழைய சுற்று நிருபத்திற்கு அமைவாக நேர்முகப் பரீட்சைகள் முடிந்ததன் பின்னர் புதிய சுற்று நிருபத்தைப் பின்பற்றுமாறு கோரப்பட்டுள்ளதே அதிபர்கள் குழம்பிப்போயுள்ளமைக்குக் காரணமாகும்.

இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் அதிபர்கள் சிக்கலில் உள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1221

Search for people, places and things   Nagendram   Home

தரணிகா




கேசவி




சஞ்சனா




தேனுகன்




மாதுளன்




சுஷ்மிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புத்தரின் சின்னங்களை அவமானப்படுத்திய தேரர் மண்டியிட்டு மன்னிப்புக் கோரினார்



(கொழும்பு)

புத்த பெருமானின் புனிதச் சின்னங்களையும், தலதா மாளிகை மீதும் பகிரங்கமாக விமர்சனங்களை மேற்கொண்டுவந்த பிட்டிதுவே சிறிதம்ம தேரர், மல்வத்து பீட மகாநாயக்கரிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரிய சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மல்வத்து பீட மகாநாயக்கர் முன்பாக மண்டியிட்டு மன்னிப்புக் கோரியதோடு, எழுத்து மூலமும் தனது மன்னிப்பை அவர் கேட்டதை அடுத்து மல்வத்துபீடம் அவருக்கான மன்னிப்பை கடும் எச்சரிக்கையுடன் வழங்கியுள்ளது.

பகிரங்க மேடைகளிலும் பல இடங்களிலும் தலதா மாளிகை, மல்வத்து பீடம் மற்றும் புத்த பெருமானின் புனிதச் சின்னங்களை அவமானப்படுத்தியும் பகிரங்கமாக விமர்சனம் செய்த குற்றச்சாட்டு பிட்டிதுவே சிறிதம்ம தேரர் மீது சுமத்தப்பட்டது.

இந்த நிலையில் பிட்டிதுவே சிறிதம்ம தேரருக்கு எதிராக மல்வத்துபீடம் உட்பட பௌத்த மக்களின் முக்கிய தலைமைப்பீடங்கள் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து பிட்டிதுவே சிறிதம்ம தேரர் நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் செய்து திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தலைமையிலான மல்வத்து பீட மகாநாயகப் பீடத்திலுள்ள முக்கிய தேரர்களை சந்தித்தார்.

எந்தவிதத்திலும் தலதா மாளிகையையோ அல்லது புத்த பெருமானின் புனிதச் சின்னங்களையோ கடுமையாக விமர்சிக்கவில்லை என்றும், எந்த வகையிலும் மல்வத்து பீடத்தை அவமானப்படுத்தும் வகையாக கருத்துக்களை வெளியிடவும் இல்லை என்று பிட்டிதுவே சிறிதம்ம தேரர் மண்டியிட்டு மன்னிப்பு கோரினார்.

எனினும்மன்னிப்புகோரல் கடிதமொன்றை முன்வைத்தால் மட்டுமே மன்னிப்பை வழங்க முடியும் என்று மல்வத்துபீடம் இடித்துரைத்துள்ளது.

இதனிடையே தனக்கான எழுத்துமூல மன்னிப்பு கோரலை பிட்டிதுவே சிறிதம்ம தேரர் முன்வைத்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட மல்வத்துபீட மகாநாயக்கர், அவருக்கான மன்னிப்பை வழங்கினார். (இ-7)

# இலங்கை - இந்திய நிதியமைச்சர்கள் சந்திப்பு



(சென்னை)

இலங்கை நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இந்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லிக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வோஷிங்டனில் இடம்பெறும் உலக வங்கி கூட்டத்தொடரில் பங்கேற்கச் சென்றுள்ள இலங்கை நிதியமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவே இவ்வாறு இந்திய நிதியமைச்சரை சந்தித்து ள்ளனர்.

இந்த சந்திப்பின் போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

# அணு ஆயுத ஒழிப்புக்கான நோபல் தருணம்

அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்துவரும் 'ஐகேன்' (சர்வதேச அணு ஆயுத ஒழிப்புப் பிரசாரக் குழு) எனும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்கு இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் விருது வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் அணு ஆயுத அச்சுறுத்தல் உருவாகியிருக்கும் ஒரு பதற்றமான தருணத்தில் இந்த அமைப்புக்கு அமைதிக்கான நோபல் விருது வழங்கப்படுவது மிகப் பொருத்தமானது. ஐ.நா. ஆதரவில் கொண்டுவரப்பட்ட அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தை அனைத்து நாடுகளும் ஏற்பதற்கான சட்ட நடைமுறைகள் குறித்து ஐகேன் எடுத்து வரும் முயற்சிகளையும் நோபல் பரிசுக்குழு பாராட்டியிருக்கிறது.

2007இல் அவுஸ்திரேலியாவில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, அதே ஆண்டில் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் அதிகாரபூர்வமாகச் செயற்படத் தொடங்கியது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் உள்ளது. 100இற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த அமைப்புகள், சிறு குழுக்கள் இந்த அமைப்பில் இடம் பெற்றிருக்கின்றன.

அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்ற இலக்கு ஐ.நா.சபையில் 1946இலேயே ஏற்கப்பட்டது. ஆனால் அதற்கான உடன்பாட்டை வகுக்க 70 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. அணுகுண் டுகளைப் பயன்படுத்தி எதிரி நாட்டை நாசப்படுத்த நினைத்தால் அந்நாட்டின் நில எல்லையோடு நின்றுவிடாமல் நிலம், நீர், காற்று மூலம் பரவி தொடர்பே இல்லாத பிறநாட்டு உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் கூட ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற உண்மைதான் 122 நாடுகளை இந்தத் தடை உடன்பாட்டுக்கு ஆதரவாகக் கையெழுத்திட வைத்துள்ளது.

அணு ஆயுதங்கள், மனித உரிமைகள் சட்டத்துக்கு இயைந்தவையாக இருக்க வேண்டும் என்ற நீதிமன்றக் கண்டனம்தான் இப்படியொரு சர்வதேச உடன்பாட்டுக்கு கிரியா ஊக்கியாகச் செயற்பட்டிருக்கிறது. 1996இல் சர்வதேச நீதிமன்றத்தில் ஆலோசனைக் கருத்தாகத்தான் இது சொல்லப்பட்டது. நிலத்துக்கடியில் வெடிக்கப்படும் அணுகுண்டுகளால் உள்நாட்டு மக்களுக்கு நீண்டகால அடிப்படையில் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை. அவையும் சர்வதேச சமூகத்தின் கவலைகளைப் பெருக்கியுள்ளன.

கடந்த செப்டெம்பரில் இத்தாலிய நாடாளுமன்றத்தில் நிறைவேறிய தீர்மானம் ஐ.நா. அணு ஆயுதத் தடை உடன்பாட்டில் சேர்ந்துகொள் வதற்கான வாய்ப்பை ஆராயுமாறு அரசை வலியுறுத்தியது. ஹாலந்து நாடாளுமன்றமும், இந்த உடன்பாட்டுப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அரசுக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றியது. உலக நாடுகள் அனைத்தும் இந்த உடன்பாட்டை உடனடியாக ஏற்று, அங்கீகரித்துவிடும் என்று கூறிவிட முடியாது. எனினும், எதிர்காலத்தில் அணு ஆயுதங்கள் கூடாது என்ற மக்கள் வலியுறுத்தினால் அதை அரசால் நிராகரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இந்தச் சூழலில், ஐகேன் அமைப்பின் முயற்சிகள் எதிர்காலத்தில் நிச்சயம் நல்ல பலனைத் தரும் என்று எதிர்பார்க்கலாம். (இ-7)

த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்

# கால்வாயை காணோம்



(கொழும்பு)

இலங்கையின் ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் மீகஹாகிவ்ல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதான கால்வாய் ஒன்று காணாமல் போயுள்ளது.

குறித்த பிரதேச செயலக பிரிவுக்கு சொந்தமான கோமாரிக்கா விவசாய நிலத்திற்கு நீர் விநியோகிக்கும் வெல்லே வல ட-2 என்ற பிரதான கால்வாயின் நீரே நேற்று முன்தினம் மாலை முதல் காணாமல் போயுள்ளது.

திடீரென நீர் வற்றியமையினால் கால்வாய் காணாமல் போயுள்ளமை கண்டு தாம் அதிர்ச்சியடைந்ததாக பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் குறித்த கால்வாயில் ஏற்பட்டுள்ள பாரிய துளை ஊடாக நீர் பாய்ந்து செல்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கால்வாய் செல்லும் குறித்த பகுதியில் சுமார் 15 அடி ஆழமான பாரிய துளை ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும், அதனுள் பாரிய சத்தத்துடன் நீர் புகுந்துள்ளதாகவும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் மண்மேடு ஒன்று சரிந்து விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தினை அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளதோடு இது தொடர்பாக புவியியலாளர்கள் கவனம் செலுத்துவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தேர்தலைக்கோரி ஆணைக்குழுவுக்கு படையெடுக்கிறது பவ்ரல் அமைப்பு



அம்பகமுவ, நுவரெலியா மற்றும் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளின் பிரச்சினைகளை காரணம்காட்டி தேர்தலை மீண்டும் ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த பிரச்சினை குறித்து விளங்கப்படுத்தவும், விரைவில் தேர்தலை நடத்தும்படியும் வலியுறுத்தி பவ்ரல் எனப்படும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை சந்திக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான திருத்தச் சட்டத்தின் பிரதி கடந்த வாரம் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா கையளித்திருந்தார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர், இன்னும் ஒருவாரத்தில் வர்த்தமானி அறிவிப்பை விடுத்தால் ஜனவரி மாதம் தேர்தலை நடத்த முடியும் என்று கூறியிருந்தார்.

எனினும் இதுவரை அதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் கொழும்பில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை பவ்ரல் அமைப்பு நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது கருத்து வெளியிட்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, மிகவிரைவில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குரிய ஏற்பாடுகளை பூர்த்தி செய்யும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2017-16.11.2017



சமயோசிதமாகப் பேசி காரியங்களைச் சாதிக்கும் மிதுன இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் புதன் சூரியனுடன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். அவரோடு குருவும் சேர்ந்திருக்கிறார். சூரியன் நீச்சம் பெற்று விளங்குவதால் நீச்சபங்க ராஜயோக அமைப்பு உருவாகிறது.

மாதத் தொடக்கத்தில் பஞ்சம விரயாதிபதியான சுக்ரனும் நீச்சம் பெற்றிருக்கிறார். இப்படிப்பட்ட கிரகங்களை வைத்து பார்க்கின்ற பொழுது சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எதிர்கால நலன் கருதி ஏதேனும் திட்டங்களை நீங்கள் தீட்டியிருந்தால் அவை வெற்றி பெறும்.

தனாதிபதி சந்திரன் 4இல் சஞ்சரிப்பதாலும் தன ஸ்தானத்தில் ராகு இருப்பதாலும் பணப் புழக்கத்திற்கு குறைவிருக்காது. என்றாலும் ஒருசில சமயங்களில் செலவைக் குறைத்துக் கொள்வது நல்லது.

தொழில் நிமித்தமாக ஒரு சிலருக்கு கடன் சுமை ஏற்படும். தொழிலை விரிவுபடுத்த வங்கிகளை நாடியவர் களுக்கு வங்கிப் பணம் கிடைக்கலாம். துலாம் இராசிக்குப் பெயர்ச்சியான குரு இப்பொழுது கொஞ்சம் வலிமை இழந்திருக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமையிழக்கும் பொழுது யோகத்தைச் செய்யும் என்பார்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குரு பார்வை இப்பொழுது உங்களுக்கு நன்மையைச் செய்யும் என்றே சொல்லலாம். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். பத்திரப் பதிவுகளில் இருந்த தடைகள் விலகும். கட்டடப் பணி பாதியில் நிற்கின்றதே, பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்க வாய்ப்புகள் கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல நேரம் தொடங்கப் போகின்றது.

சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம் இது என்பதால் நாளும் பொழுதும் நல்ல விரயங்கள் வந்து கொண்டே இருக்கும். அவற்றைப் பரிசீலனை செய்து பட்டியலிட்டு வைத்துக் கொண்டு பிள்ளைகளின் வெளிநாட்டு யோகம் முதல் கல்யாண காரியங்கள் வரை அத்தியாவசியத் தேவைகளையெல்லாம் அடுக்கடுக்காகச் செய்து முடிப்பீர்கள். குருவினுடைய பார்வை லாப ஸ்தானத்தில் பதிவதால் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்.

## ஒருசிலருக்கு உத்தியோகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும்!

இம்மாதம் கந்தசஷ்டி விழா வருகிறது. பொதுவாக உங்கள் இராசிக்கு 6,11 இற்கு அதிபதியானவர் செவ்வாய். அந்த செவ்வாய்க்குரிய முருகப்பெருமானை விரதமிருந்து வழிபட்டால் வேண்டிய நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பது வழிபாடுகள்தான் என்பதை அனுபவத்தில் தான் உணரமுடியும்.

விருச்சிக புதனின் சஞ்சாரம்!

ஒக்டோபர் 28ஆம் திகதி விருச்சிகத்திற்கு புதன் வரப் போகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உங்களுக்கு கிடைக்கும். மக்கள் செல்வங்களின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தாய்வழி ஆதரவு உண்டு. இடம், பூமி விற்பனையில் இதுவரை இருந்த தடைகள் அகலும்.




வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள் வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஒருசிலருக்கு வந்து சேரும். பழைய உத்தியோகத்திலிருந்து விடுபட்டு புதிய உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!

உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன் அவர் இதுவரை நீச்சம் பெற்று வலிமையடைந்து கன்னி இராசியில் சஞ்சரித்து வந்தார். அவர் நவம்பர் 3ஆம் திகதி துலாம் இராசிக்குத் தனது சொந்த வீட்டிற்கு வருகின்றார். இது ஒரு அற்புதமான நேரமாகும். பாக்ய ஸ்தானத்தில் பாக்யாதிபதி வலிமை பெற்றிருக்கும். இந்த நேரத்தில் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சங்கடஹர சதுர்த்தி விரதமிருப்பதன் மூலம் சங்கடங்களில் இருந்து விடுபட இயலும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு மிகச்சிறந்த நற்பலன்கள் கிடைக்கும். காரணம் குரு பார்வையும் இருக்கிறது. தனஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். சிக்கல்கள் விலகும். சிரமங்கள் குறையும். தக்க சமயத் தில் தாய் வழி ஆதரவு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கைநிறைய‌ச் சம்பளம் வாங்கும் யோகமும் பதவி உயர்வும் கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். 8இல் கேது இருப்பதால் சர்ப்ப தோஷமும் இருக்கிறது.

எனவே நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். கிருஷ்ணர் வழிபாடு கீர்த்தியை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



பொதுநலத்தில் புகழ் குவிக்க விரும்பும் கடக இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்மத்தில் ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் வீற்றிருக்கிறார்கள். பாம்பு கிரகங்களின் ஆதிக்கம் இருப்பதால் வரவும் செலவும் சமமாகவே இருக்கும். வாய்ப்புகளில் ஒன்றிரண்டு கைநழுவிப் போகலாம். முயற்சியின் பெயரிலேயே சில காரியங்கள் முடிவடையும். இருந்தாலும் நீங்கள் தளர்ச்சியடைய வேண்டாம். சுய ஜாதகத்தின் அடிப்படையில் தசாபுத்திக்கேற்ற தெய்வங்களை வழிபடுவதோடு, ராகு-கேது பிரீதி செய்வது தடைகளை விலக்கும்.

மாதத் தொடக்கத்தில் சந்திரன் சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். அவரோடு யோகம் தரும் செவ்வாயும் இணைந்திருக்கிறார். சுக்ரன் நீச்சம் பெற்றிருப்பதும் ஒரு வகைக்கு நன்மைதான். இப்படிப்பட்ட கிரக நிலைகளின் விளைவாக தொழில் சீராக இருக்கும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். கடன் சுமையைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், ஆரோக்கியத் தொல்லைகள் வந்து போகும். இதுபோன்ற காலங்களில் நோய்க்கான அறிகுறி தென்படும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றம் செய்வீர்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சனியின் பலம் நன்றாக இருக்கிறது. பஞ்சம ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, பூர்வ புண்ணிய பலன்கள் நிறைய வந்து சேரும். குறிப்பாக பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். பரம்பரை கோவில் திருப்பணியை குதூகலமாக முன்னின்று நடத்த வாய்ப்புகள் கைகூடிவரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சியால் பலன் உண்டாகும்.

பெண் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளைக் கருதியும் கல்வி நலன் கருதியும் செய்த முயற்சி கைகூடும். திருமணச் சீர் வரிசைக்காக விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

இம்மாதத் தொடக்கத்தில் வரும் தீபாவளித் திருநாளான்று உங்களுக்கு யோகம் தரும் வண்ணத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் சென்று சிவன், விஷ்ணுவை வழிபடுங்கள். நாகத்தை அணிந்த பெண் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதும் நல்லது.

## நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும்!

விருச்சிக புதனின் சஞ்சாரம்

ஒக்டோபர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் வரப்போகிறார். உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன், சகாய ஸ்தானதிபதியாக் விளங்கும் புதன், புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் சகாயங்கள் கிடைக்கும். பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் நம்பிக்கை தருவதாக அமையும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மாங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். சேமிப்பில் சிறிது கரைந்தாலும் அது நல்ல செலவாகவே இருக்கும்.

துலாத்தில் சஞ்சரிக்கும் சுக்ரன்




இதுவரை சுக்ரன் கன்னி இராசியில் நீச்சம் பெற்று சஞ்சரித்து வந்தார். இப்பொழுது நவம்பர் 3ஆம் திகதி துலாம் இராசிக்கு அடியெடுத்து வைக்கிறார். அந்த வீடு சுக்ரனுக்குச் சொந்த வீடாகும். எனவே சுக ஸ்தானம் பலப்படுகிறது. ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் படிப்படியாகப் பூர்த்தியாகும். வெளிநாடு சென்று பணிபுரிய இதுவரை அங்கீகாரம் கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது அதற்கான உத்தரவாதம் கிடைக்கும்.

இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். பெற்றோர்களின் மணி விழா, முத்து விழா, பவள விழாக்களை நடத்திப் பார்க்கும் நேரம் இது. சுபச்செய்திகள் வீட்டை முற்றுகையிடும். தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட பூமி, இப் பொழுது நல்ல விலைக்கு விற்பனையாகி கைகளில் பணம் புரளும். நிலத்தால் வந்த பணத்தைக் கொண்டு புதிய சொத்துகளை வாங்க ஆர்வம் காட்டுவீர்கள். பங்காளிப் பகை மாறும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபட்டு வருவது நல்லது. அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அதிகார வர்க்கத்தினரின் ஒத்துழைப்போடு நல்ல பலன்களைக் காண்பீர்கள். கணவன்-மனைவி உறவு திருப்தி தரும். பிள்ளைகளின் நலன் கருதிப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். தாயின் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன்பணிபுரிபவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். ஊதிய உயர்வு மட்டுமல்லாமல், வரவேண்டிய சம்பளப் பாக்கிகளும் வந்து சேரும். குரு கொஞ்சம் வலிமை இழந்திருப்பதால் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுங்கள். அதோடு குலதெய்வ வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். மாதத்தின் பிற்பகுதியில் சுக்ரப் பெயர்ச்சிக்குப் பிறகு உங்களது எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## குணம் நாடுதல் பெருங்குணம்



பரிமளம் என்னும் ஒரு சிறுமி இருந்தாள்.அவளுக்கு பத்து வயது தான் இருக்கும்.அவள் அப்பா வங்கியில் பெரிய பதவி வகித்து வந்தார்.அத்துடன் பரிமளம் அவரின் செல்லப் பெண்.எனவே அவள் கேட்டதையெல்லாம் வாங்கித் தருவார்.

அவளும் தேவையற்றதைக் கேட்காமல் தனக்கு எது தேவையோ அதை மட்டும் கேட்டுப் பெறும் குணமுடையவளாக இருந்தாள். அதனால் இந்த அவளின் நல்ல குணத்தை அறிந்திருந்த அவளின் தந்தை அவள் எது கேட்டாலும் காரணம் கேட்காமல் வாங்கித் தருவார்.

ஒருமுறை பொங்கல் பண்டிகை வந்தது.பரிமளத்திற்கு அவள் அப்பா பட்டுப் பாவாடை வாங்கித் தருவதாகச் சொல்லி கடைக்கு அழைத்துச் சென்றார்.ஆனால் கடைக்குச் சென்றதும் பரிமளம் தனக்கு ஒரு பட்டுப் பாவாடைக்குப் பதில் மூன்று சாதாரண பாவாடை வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டு அதேபோல் வாங்கி வந்தாள்.

தன் மகள் பட்டுப் பாவாடை கட்டிப் பார்க்க ஆசைப்பட்ட அவளின் அம்மா பரிமளத்தைக் கடிந்து கொண்டார்.

ஆனால் புன்னகையையே பதிலாகத் தந்து விட்டு அந்த உடைகளை வாங்கிச் சென்று விட்டாள் பரிமளம்.

மறுநாள் பொங்கல் பண்டிகையன்று பரிமளத்தின் பள்ளித் தோழிகள் அவள் வீட்டுக்கு வந்தனர். அவர்களை உபசரித்து அமரச் சொல்லி பொங்கல்,வடை, கரும்பு,பணம் முதலியன கொடுத்து மகிழ்ச்சியுடன் அனுப்பினாள் பரிமளம். அவளுடன் படிக்கும் வள்ளிக்கு தான் வாங்கிவந்த உடைகளில் ஒன்றைக் கொடுத்தாள் . வள்ளியின் முகத்தில் அப்போது தோன்றிய மகிழ்ச்சியையும் நன்றிக் கண்ணீரையும் கண்டு பரிமளத்தின் பெற்றோரே மனம் நெகிழ்ந்தனர்.

அவளது இந்தப் பண்பைப் பார்த்து அவளின் பெற்றோர் மிகவும் பெருமைப்பட்டனர். மகளின் இயற்கையான உயர்ந்த பண்பைக் கண்டு அவர்கள் மனம் மகிழ்ச்சியடைந்தது. பரிமளமும் தன் பெற்றோர் தனக்குத் துணையாக இருப்பதை உணர்ந்து மிகவும் மகிழ்ந்தாள்.

இவளது இந்த உதவும் பண்பை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தாள் ஜோதி என்ற பள்ளித் தோழி.

அவள் அடிக்கடி தன் உறவுக்காரப் பெண் ஒருத்தி மிகவும் கஷ்டப் படுவதாகக் கூறி பரிமளத்திடம் உதவி பெற்று வந்தாள். எப்போதும் முகம்சுளிக்காமல் அவள் கேட்ட உதவிகளைச் செய்து வந்தாள் பரிமளம்.

இவளின் தோழிகளில் ஒருத்தி ஜோதியின் கெட்ட எண்ணத்தை அவளிடம் கூற அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத பரிமளம் "எப்படியோ யாருக்கோ உதவி செய்யணும் அப்பிடின்னு நினைக்கிறாள் இல்லையா? அந்த நல்ல குணம் இருக்கு இல்லையா? அதுபோதும் எனக்கு" என்று சொல்லிவிட்டு தொடர்ந்து உதவிகள் செய்து வந்தாள்.

ஏதேனும் தேவைப்பட்டால் இப்போதெல்லாம் சில சிறுமியர் பரிமளத்திடம் கேட்காமல் ஜோதியிடம் கேட்டுப் பெறத் தொடங்கினர்.

நல்ல உள்ளம் படைத்த பரிமளம் எப்படியோ பிறருக்கு உதவ முடிந்தால் போதும் என்று வழக்கம் போல ஜோதிக்கு உதவி செய்து வந்தாள்.

ஒருமுறை ஜோதி "ஒரு ஏழைப் பெண்ணின் வீடு தீப்பற்றிக் கொண்டது நாம் ஏதேனும் உதவணும் பரிமளா" என்று கூறி நிறைய உடைகள் கொஞ்சம் கணிசமான பணம் வேண்டும் என்று கேட்டுப் பெற்றாள். பரிமளமும் தன் தந்தையாரிடம் கேட்டு வாங்கிவந்து ஜோதியிடம் கொடுத்தாள்.

பல நாட்களாக சேமித்த பணம் ஜோதியிடம் இருந்தது. பணம் சேர சேர ஜோதியின் ஆசையும் அதிகமாயிற்று.

(தொடரும்)

## 17.10.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1091 - லண்டனில் பெரும் சூறாவளி இடம் பெற்றது.
- 1346-இங்கிலாந்தின் மூன்றாம் எட்வேர்ட் ஸ்கொட்லாந்தின் இரண்டாம் டேவிட் மன்னனைச் சிறைபிடித்து 11 ஆண்டுகள் லண்டன் கோபுரத்தில் அடைத்து வைத்தான்.
- 1604- ஜெர்மனிய வானிலையாளர் ஜொகான்னஸ் கெப்லர் வானில் திடீரென மிக ஒளிர்வுள்ள விண்மீன் (எஸ்.என். 1604) தோன்றுவதைக் கண்டார்.
- 1610- 13ஆம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.
- 1660-இங்கிலாந்தின் 1ஆம்சார்ல்ஸ்மன்னனுக்கு மரண தண்டனையை அறிவித்த ஒன்பது பேர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1662-இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ்டன் கேர்க் நகரை 40,000 பவுணிற்கு பிரான்சுக்கு விற்றான்.
- 1800-டச்சு குடியேற்ற நாடான குரக்காவோ இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் வந்தது.
- 1806- ஹெயிட்டியின் மன்னன் 1ஆம் ஜாக் படுகொலை செய்யப்பட்டான்.
- 1907-மார்க்கோனி அட்லாண்டிக் நகரங்களுக்கிடையேயான தனது முதலாவது கம்பியில்லாத் தொடர்பை கனடாவின் நோவா ஸ்கோசியாவுக்கும், அயர்லாந்துக்கும் இடையே ஏற்படுத்தினார்.
- 1912- முதலாம் பால்க்கன் போர்: பல்கேரியா,கிரேக்கம், சேர்பியா ஆகியன ஓட்டோமான் பேரரசுடன் போரை அறிவித்தன.
- 1917- முதலாம் உலகப் போரில் ஜெர்மனி பிரித்தானியா மீதான தனது முதலாவது குண்டுத்தாக்குதலை நிகழ்த்தியது.
- 1933-அல்பேர்ட் ஐன்ஸ்டீன் நாசி ஜெர்மனியில் இருந்து வெளியேறி ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார்.
- 1941- இரண்டாம் உலகப் போரில் முதற் தடவையாக ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்கக் கப்பலைத் தாக்கியது.
- 1961-பாரிசில் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கான அல்ஜீரியர்கள் பெரிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1966-நியூயோர்க்கில் கட்டடம் ஒன்றில் இடம்பெற்ற தீயில் 12 தீயணைப்புப். படையினர் சிக்கி இறந்தனர்.
- 1979-அன்னை தெரேசா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- 1995-யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்ற இலங்கை இராணுவம் ரிவிரெச நடவடிக்கையை ஆரம்பித்தது.
- 1998-நைஜீரியாவில் பெற்றோலியம் குழாய் வெடித்ததில் 1200 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2003-தாய்ப்பே 101 உலகின் மிக உயரமான வானளாவி ஆனது.
- 2006-ஐக்கிய அமெரிக்காவின் மக்கள் தொகை 300 மில்லியனை எட்டியது.
- 2006-ஈழப்போர்: புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பு நிலையம், இலங்கை அரசின் வான் குண்டுத் தாக்குதலில் முழுமையான சேதமடைந்தது.

பிறப்புக்கள்

- 1817- சையது அகமது கான், இந்திய மெய்யியலாளர் (இ. 1898)
- 1906- கே. பி. ஹரன், இந்திய-ஈழப் பத்திரிகையாளர் (இ. 1981)
- 1915- ஆர்தர் மில்லர், அமெரிக்க எழுத்தாளர் (இ. 2005)
- 1948-ராபர்ட் ஜோர்டான், அமெரிக்க எழுத்தாளர் (இ. 2007)
- 1965-அரவிந்த டி சில்வா, இலங்கைத் துடுப்பாளர்
- 1970-அனில் கும்ப்ளே, இந்தியத் துடுப்பாளர்

இறப்புகள்

- 532- இரண்டாம் போனிஃபாஸ் (திருத்தந்தை)
- 1849- பிரடெரிக் சொப்பின், போலந்து செவ்விசைக் கலைஞர் (பி. 1810)
- 1920-ஜான் ரீட், அமெரிக்கப் பத்திரிகையாளர், கவிஞர் (பி. 1887)
- 1981- கண்ணதாசன் கவிஞர் (பி. 1927)
- 2014-மசாரு இமோடோ, ஜப்பானிய எழுத்தாளர் (பி. 1943)

சிறப்பு நாள்

- உலக வறுமை ஒழிப்பு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 600 | 400 | 300 |
| தக்காளி | 240 | 140 | 200 | 200 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 70 |
| கோவா | 150 | 80 | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 80 | 160 | 200 | 80 |
| பூசணி | 60 | 30 | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 70 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 100 | 75 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 230 | 250 | 280 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 75 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 300 | 240 | 300 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 110 | 140 | 200 | 180 |
| லீக்ஸ் | 130 | 80 | 200 | 120 | 200 |
| பீற்றூட் | 80 | 70 | 100 | 100 | 80 |
| கறிமிளகாய் | 240 | 240 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 300 | 200 | 250 |
| போஞ்சி | 200 | 100 | 150 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 260 | 220 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 90 | 60-80 | 80 |
| இராசவள்ளி | 250 | 380 | — | — | 350 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 | — |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 100 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | — | 30 | — | 80 | 80 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரவர் சக்திக்குத் தகுந்த வேலையைச் செய்வது புத்திசாலித்தனம். இதய நோய் உள்ளவன் பளுவான இரும்பைத் தூக்கக்கூடாது. ~ பர்ரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# என்ர ராசா சம்பந்தர் இனி ஏலாது மகன்

நேற்றைய தினம் நம் தூரத்து உறவுக்காரத் தாத்தா வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவருக்கு இப்போது வயது 90. எனினும் நாட்டு நடப்புக்களை அவதானிப்பதிலும் அவை தொடர்பில் விமர்சனம் செய்வதிலும் அவர் ஒருபோதும் தளர்ந்தாரில்லை.

அவரது வீட்டில் போய் இருந்ததும் வா ராசா எப்படிச் சுகமாக இருக்கிறியோ என்றார். நான் மௌனத்தைக் கடைப்பிடித்தேன்.

அது சரி அரிசி 120 ரூபாய், தேங்காய் 100 ரூபாய், போதாக்குறைக்கு மருந்தடித்த மரக்கறி, ஐஸ்மீன் இனி எங்க எங்களுக்குச் சுகம் வரப் போகுது.

போதாக்குறைக்கு டெங்கு நோய் வாழ வேண்டிய பிள்ளைகளைப் பலி எடுக்குது. இப்படிக்கூறியபடி தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டபடி அறைக்குள் சென்றார். ஒரு கடதாசியை எடுத்து வந்து இதை ஒருக்கா வாசி தம்பி என்று தந்தார்.

அதில் இப்படி எழுதப்பட்டிருந்தது. என் அன்புக்குரிய தம்பி சம்பந்தருக்கு வணக்கம். உங்கள் நலம் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். என் நலம் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. 90 வயது, காலன் அடிக்கடி என்னை நெருங்கப் பார்க்கிறான். இரவல் தந்தவன் அல்லவோ, எப்ப வீட்டை விட்டு வரப் போறியள் என்பது போல அவனின் பார்வை இருக்கிறது.

இருந்தும் எங்கட தமிழ் மண்ணுக்கு ஒரு விடிவைக் கண்டிட்டு போனால் இந்த ஆத்மா சாந்தியடையும் என்பதால் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இந்தத் தீபாவளிக்குப் பிறகு நான் றெடி என்று கடவுளிடம் கூறினேன்.

இப்படிக் கூறியதற்கு ஒரு காரணம் உண்டு. கடந்த தீபாவளியின்போது அடுத்த தீபாவளிக்குள் (2017) எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும். அடுத்த தீபாவளியை நாங்கள் எல்லோரும் மகிழ்வாகக் கொண்டாடுவோம் என்று தாங்கள் கூறியதுதான்.

2016ஆம் ஆண்டு தீபாவளியின்போது 2017ஆம் ஆண்டு தீபாவளியில் நாம் அனைவரும் மகிழ்வாக, சுதந்திரமாக இருப்போம் என்று நீங்கள் கூறியதை நம்பித்தான் கடவுளிடம் அப்படியொரு உறுதிமொழியைக் கூறினேன்.

இருந்தும் நேற்று முன்தினம் 15ஆம் திகதி நீங்கள் ஆற்றிய உரையைக் கேட்டேன். அடுத்த தீபாவளியின் போது (2018) நாங்கள் எல்லோரும் மகிழ்வாக இருப்போம் என்று கூறியிருந்தீர்கள்.

2016ஆம் ஆண்டில் கூறியதை 2017இலும் கூறியபோது நான் அதிர்ந்து போனேன். இன்று போய் நாளை வா என்ற கதைதான் இது என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஏதோ உங்கள் அரசியல் பிழைப்பு நடக்கட்டும். இனி என்னால ஏலாது மகன். 2018 தீபாவளிக்கு நான் இருக்க மாட்டேன். 2018 இல 2019ஆம் ஆண்டில் மகிழ்வாக இருப்போம் என்று கூசாமல் சொல்லுவியள்.

ஏதோ! யான் வெளிக்கிட்டிடுவன். நல்ல செய்தி ஏதும் நடந்தால் நல்லது. உங்களிட்ட இருந்து தமிழ் மக்களை கடவுள் காப்பாற்றட்டும்.

இப்படி அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

# சுதந்திரக் கட்சியோடு இணையப் போவதில்லை

## கூட்டு எதிர்க்கட்சி கடும் முடிவில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடிப்படையாக கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் எவ்விதமான பேச்சுவார்த்தைக்கோ, உடன்பாடுகளுக்கோ வரப்போவதில்லை என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித் துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட கூட்டு எதிர்க்கட்சி தயாரில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் விசேட சந்திப்பிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கூட்டு எதிர்க் கட்சிக்கு அழைப்பு விடுக்க தீர்மானித் துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த சந்திப்பு நடைபெறும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையில் கடந்த தேர்தலில் கூட்டணியில் இணைந்து போட்டியிட்ட அனைத்து கட்சிகளுக்கும் இந்த சந்திப்பில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மகிந்த அபேவர்தன, கடந்த பொதுத் தேர்தலில் இணைந்து போட்டியிட்ட போதிலும் பின்னர் வாக்குறுதிகளும் இணக்கப்பாடுகளும் மீறப்பட்டதாகவும் இதனால், இம்முறை அப்படியான தீர்மானங்கள் எடுக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். (இ-7)

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பும்

யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும். (இ-9)

## இளைஞன் கைது

சுவிட்சர்லாந்திலிருந்து 20 வருடங்களுக்குப் பின்னர் தாயகம் திரும்பிய இளைஞன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு சுவிட்சர்லாந்திலிருந்து வந்த இவரை விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்து தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். (ம)

# தேங்காய்த் தட்டுப்பாட்டிற்கு மாற்றுவழியை தேடவேண்டும்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தேங்காய்க்கு கடுமையான கேள்வி தற்போதும் இருந்துக் கொண்டே வருகின்றது. இந்நிலை எதிர்காலத்திலும் தொடரலாம் எனவே, இதற்கு மாற்றுவழியை தேட வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழு தலைவருமான ஞானமுத்து ஸ்ரீநேசன நேற்று தெரி வித்தார்.

வவுணதீவு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# மதுபானசாலைக்கு பூட்டு

(கொழும்பு)

தீபாவளி தினத்தன்று பதுளை மாவட்டத்தின் அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுமாறு, பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்த குமார் மதுவரி மற்றும் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்திற்கமைய அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் 18.10.2017ம் திகதி மட்டும் மூடிவிட உத்தர விடப்பட்டுள்ளது.

மதுவரி மற்றும் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள சுற்றறிக்கை யொன்றில் தீபாவளி தினத்தில் பதுளை மாவட்டத்தின் மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தையும் மூடிவிடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட தமிழ் மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்தே பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் அ. அரவிந்தகுமார் மேற்படி கடிதத்தை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

வீதியைக் கடந்த குடும்பஸ்தர் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த அவர் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற இவ் விபத்தில் வியாபாரிமூலையைச் சேர்ந்த கனகசபை சுசீந்திரன் (வயது-52) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேல்திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)




கலியுகம் முழுக்க வாங்கின கடனுக்கு வட்டியையும் கலியும் முடியும் தறுவாயில் மொத்தக் கடனையும திருப்பியளிப்பதாக ஒப்பந்தம்.

பணம் கைக்கு வந்தவுடன் பந்தல் போடப்பட்டது.

ஆகாசமன்னனின் தலைநகரான நாராயணபுரத்தில் வைகாசி மாதம் சுக்லபட்ஷ தசமி திதியில் வெள்ளியன்று வேள்வித்தீ சாட்சியாக ஸ்ரீநிவாசன்- பத்மாவதி கல்யாணம் சுபமாக நடந்தேறியது.

திருமணத்திற்குப் பின் பத்மாவதியை அழைத்துக் கொண்டு தன் இருப்பிடமான சேஷாத்ரி மலைக்குக் கிளம்பினான் ஸ்ரீநிவாசன். (தொடரும்)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### காப்பு நாணை களையும் நிகழ்ச்சி

பூர்ணாகுதி நிகழ்ச்சிக்குப் பிறகு மணமக்கள் தங்களது கையில் கட்டியுள்ள காப்பு நாணை கழற்றி வேதியரிடம் தரவேண்டும். வேதியர் அரசாணைக் கொம்பில் கட்டியுள்ள மஞ்சள் நாணை கழற்றிக் கொண்டு இவ்விரு நாண்களையும் தட்டில் வைத்து மணமக்களிடம் காண்பிப்பார். மணமக்கள் அந்நாண்களை தொட்டு வணங்க வேண்டும். பிறகு அந்நாண்கள் தீயில் இடப்படும். (தொடரும்)

# உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்றுநோயானது பால் சுரப்புக் கலங்களிலோ பாலைக்கடத்தும் கான் கலங்களிலோ ஏற்படுகின்ற அசாதாரண கட்டுப்பாடற்ற கலப்பிரிவினால் ஏற்படும் கட்டிகள் காரணமாக ஏற்படுகின்றது.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம் மாநகர சபை

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

❖ உற்சாகத்துடன் இருக்கத் துவங்குவது தான், நீ ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.

❖ நீ செய்த தவறுகளை வாழ்த்து அந்தத்தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

❖ தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

❖ அடுத்தவர்களின் பாதையைப் பின்பற்றக்கூடாது. காரணம் அது அவர்களுடைய பாதை, உன்னுடையதுஅல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்து விட்டால், அதன்பிறகு நீ செய்ய வேண்டியது எதுவும் இல்லை.

❖ [illegible] உயிர்கள். அண்ட சராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பின்...

மாகாண முதலமைச்சரின் விருப்பத்திற்கு அமைய ஆளுநரை நியமிக்கும் யோசனை ஒன்று புதிய அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆளுநர் என்பவர் ஜனாதிபதியின் மாகாண பிரதிநிதியாவார். அவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் உள்ளது.

எனினும் புதிய அரசியல் அமைப்பில் இந்த அதிகாரம் முதலமைச்சரின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது.

இதன்மூலம் வடக்கு பிரதேசம் ஈழ நாடாக பிரிந்து செல்ல பிரதமர் வழிசமைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை, மாறாக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என ஒன்றிணைந்த எதிர்கட்சியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தண்டனை வழங்கினால் முன்னாள் போராளிகள் உட்பட இராணுவத்துக்கும் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில, விடுதலை வழங்கினால் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

"யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்தபோது அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையில் எந்தவொரு அரசியல் கைதியும் இல்லை என நாங்கள் தெரிவிக்கின்றோம். யார் இந்த அரசியல் கைதிகள்? ஒருவரது அரசியல் சிந்தனையினால் இன்னுமொருவர் சிறை வைக்கப்பட்டால் அவரே அரசியல் கைதி. 1983 ஆம் ஆண்டில் ஜே.வி.பி, நவ சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்மியூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் தடைசெய்யப்பட்டதோடு கட்சியிலிருந்தவர்களும் சிறைவைக்கப்பட்டனர். அவர்களே அரசியல் கைதிகள். எனவே இப்போது சிறைவைக்கப்பட்டவர்கள் பயங்கரவாதிகளே தவிர, அரசியல் கட்சிகள் அல்லர். இவர்கள் பயங்கரவாத அமைப்பில் இருந்ததற்காக அல்ல. துப்பாக்கிகளை கையில் வைத்திருந்தபோது சரணடைந்த, கைதாகிய முன்னாள் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டனர். ஆனால் இப்போது சிறைகளில் இருப்பவர்கள் யார்? இனபடுகொலை உட்பட பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்ட கைதிகளாவர். இவர்கள் அரசியல் கைதிகளாக சிவாஜிலிங்கம், விக்னேஸ்வரனுக்கு தென்பட்டாலும் இவர்களே பயங்கரவாத பெரும்புள்ளிகள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போல இரட்டை கொள்கை உடையவர்கள் உலகத்திலேயே இல்லை. இவ்வாறு சிறை வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோருகின்றனர். மறுபக்கம் எந்த சாட்சிகளுமின்றி எமது இராணுவத்தினர் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாகவும், அவர்களைத் தண்டிக்குமாறும் வலியுறுத்தி போராட்டம் செய்கின்றனர். விடுதலை வழங்கினால் அனைவருக்கும் வழங்க வேண்டும். தண்டனை வழங்கினால் அனைவருக்குமே வழங்க வேண்டும் என்றார். (ம)


### யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
### தரம்-6 அனுமதி-2018

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப்படிவமானது 20.10.2017 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் வழங்கப்படும்.
முடிவுத் திகதி:-10.11.2017
(வெள்ளிக்கிழமை)

அதிபர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
(சி-023)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

**1. தாதியர்**

- பயிற்றப்பட்ட தாதியராகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை:- 64 ஆகும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**2. உளவளத் துணையாளர்**

- உளவளத் துணையில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருத்தலுடன் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை: 60.

**3. கணக்குப் பதிவாளர்**

- க. பொ.த உயர்தரத்தில் வணிகத்துறையில் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல வேண்டும்.
- கணினி அறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
- பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை: 30றகுள் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் சகலரும் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஒழுக்கம், நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும். (கிராம சேவையாளர் நற்சான்றிதழ் மேலும் இரண்டு சமூகப் பெரியவர்களது நற்சான்றிதழ் இணைக்க வேண்டும்)

குறிப்பு:

- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு (சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன்) 26.10.2017ற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். கால தாமதமாகும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

**தி.இராசநாயகம், தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இல: 077 060 4950, 021 492 3118**
**மின்னஞ்சல் முகவரி: rasa46@yahoo.com**

(C-034)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 33ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா-18.11.2017

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 18.11.2017ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 33ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 11.01.2017ஆம் திகதிக்குப் பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 25.10.2017ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல் களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுதத்துவமாணி
3. தமிழில் முதுமாணி
4. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிப்பதற்கான பட்டப்பின் டிப்ளோமா
5. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
6. மருத்துவ விஞ்ஞானமாணி
7. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
8. சட்டமாணி
9. விவசாய விஞ்ஞானமாணி
10. தொழில் நிர்வாகமாணி (4 வருடம்/ 3வருடம்)

**வவுனியா வளாகம்**

11. வியாபார முகாமைத்துவமாணி (பொது,சிறப்பு)
12. விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும் (பொது)
13. விஞ்ஞானமாணி சிறப்பு கணினி விஞ்ஞானம்
14. விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது,சிறப்பு)
15. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
16. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)

**அறிவுறுத்தல்கள்:**

1.வேண்டுகோள்படிவங்கள்:
விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளதில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**2.கட்டணங்கள்:**

- வேண்டுகோள் கட்டணம் — ரூபா. 500.00
- சான்றிதழ் கட்டணம் — ரூபா. 500.00
- பட்டதாரி மேலங்கிக் கட்டணம் — ரூபா. 500.00

முதுநிலைப் பட்டதாரிகள்

- வேண்டுகோள் கட்டணம் — ரூபா. 500.00
- சான்றிதழ் கட்டணம் — ரூபா. 500.00
- பட்டதாரி மேலங்கிக் கட்டணம் — ரூபா. 1000.00

குறிப்பு: பின்வருவோர்சான்றிதழ் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது.

- பட்டமளிப்புவிழாவிற்கு சமுகமளிக்காது பட்டச்சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
- ஒன்று/ இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்

**3. கட்டணம் செலுத்தும்முறை:**
யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் கணக்கு இல. 162100160 000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தை செலுத்த வேண்டும். (வங்கிப்பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)
பணம் செலுத்திய வங்கிப்பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

**4.பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும்:**
நேரடியாக சமுகமளித்துபட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும்.

**5.பல்கலைக்கழக நிலுவைகள்:**
பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ்விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6.வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்:**
பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப்பற்றுச் சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 25.10.2017க்கு முன்சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடது பக்கமூலையில் பட்டம் பெறும் கற்கைநெறியை குறிப்பிடவும்)

அ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்
சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/அனுமதிகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

ஆ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்
சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தேர்வுகள்,
வவுனியா வளாகம்,
வவுனியா

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 25.10.2017

முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலதிக விபரங்களுக்கு சிரேஷ்ட உதவிப்பதிவாளர் /அனுமதிகள் (தொலைபேசி இல. 0212226714) உடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
11.10.2017

(சி-026)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கைதிகளின்...

கப்படாதவர்களாகவோ இருந்தாலும் அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டார்கள் என்பதுடன், அவர்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அச்சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.

(ii) இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொடூரமான, வெறுக்கத்தக்க ஒரு சட்டம் என்பதும் அது காலத்துக்குப் பொருத்தமற்றதென்பதும் இலங்கை அரசினால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்கப் போவதாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கம் உறுதி வழங்கியிருந்தது.

(iii)இந்த உறுதியளிக்கப்பட்ட கடப்பாட்டை இலங்கை அரசு இன்னமும் நிறைவேற்றவில்லை. ஆனாலும், இதன்மூலம் குறித்த சட்டம், சட்டப் புத்தகங்களில் தொடர்ந்திருக்க மாட்டாதென்ற இலங்கை அரசின் உறுதியளிக்கப்பட்ட கடப்பாட்டிலிருந்து தவற முடியாது.

(iv)இந்த நபர்களில் அனேகமானவர்களுக்கு எதிராக இருக்கும் ஒரேயொரு சான்று அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே என்பதோடு, அது சாதாரணமான நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான சாட்சியமாக ஏற்கப்படமாட்டாது. இதனால் வழக்குத் தொடுநர்களிடம் போதிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக அனேக வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின் றன.

(v)அனேகமாக இவர்கள் எல்லோருமே அவர்கள் கைது செய்யப்பட்டவுடன் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய காலத்தைப் போன்ற நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவல் கைதிகளாகவே இருக்கின்றனர்.

(vi)தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களின் குடும்பங்கள் அவர்களின் உழைப்பாளிகளின் ஆதரவு இல்லாமல், நீண்டகாலமாக வேதனையில் வாடுகின்றன. மிகவும் காத்திரமான இம் முக்கிய விடயத்திற்கு இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை.

(vii)பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தீய அம்சங்களுக்கும் புறம்பாக, மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) கிளர்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்கள் யாவரும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதே போன்ற ஒரு கொள்கையை தற்போதுள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் செயற்படுத்த முடியாமலிருப்பது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

(viii) இந்த வழக்குகள் முழுமையாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளவையென்பதாகக் கருத முடியாது. அரசின் முத ன்மைச் சட்ட ஆலோசகர் என்ற வகையில் சட்டமா அதிபருக்குரிய கௌரவத்தை வழங்கும் அதேவேளை, இவ்வழக்குகள் அரசியல் அடையாளங்களையும் கொணடிருப்பதனால் இவை முழுமையாகச் சட்டம் சம்பந்தப்பட்டவையென்று கருதிவிட முடியாது. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காணப்பட்டிருந்தால், கைதிகளாக உள்ளவர்களில் அனேகமானவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாதென்பதும் அவர்கள் பயனுள்ள பிரஜைகளாக இருந்திருப்பார்கள் என்று கூறுவதில் நியாயமிருப்பதைத் தெரிவிக்க முடியும். இத்தகைய சூழ்நிலையில், தாங்கள் இந்த விடயத்தை அரசியல் ரீதியாகவும் நோக்க வேண்டிய கடப்பாட்டை உருவாக்கியுள்ளது. இந்த விடயம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாமலிருப்பது இன இணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன்மதிப்பையும் அமைதி நிலைமையையும் மீள ஏற்படுத்துவதிலும் வலுவான தடையாகவே அமையும்.

(ix) சில வழக்குகள் வவுனியாவில் இருந்து அநுராதபுரத்திற்கு இடமாற்றப்பட்டதன் மூலம் சில தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அவசியமாயின் வழக்குகளை இடமாற்றம் செய்யாமல், சாட்சிகளுக்கான பாதுகாப்புக்களை வழங்கியிருக்க முடியும்.

குற்றஞ்சாட்டப்பட்ட கைதிகள் வடக்கு-கிழ க்கைச் சேர்ந்த தமிழ்மொழி பேசுபவர்கள் என்பதுடன், மற்ற நிர்வாக/ நீதிமன்றப் பாவனையில் உள்ள சிங்கள மொழியில் பாண்டித்தியம் இல்லாதவர்களாக இருக்கின்ற அதேவேளை, தமிழ்மொழிப் பாவனையில் உள்ள வவுனியா நீதிமன்றத்தில் இருந்து சிங்களமொழிப் பாவனையில் உள்ள அநுராதபுர நீதிமன்றத்திற்கு அவர்களுடைய வழக்குகள் மாற்றப்படுகின்றபோது, அவர்களால் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கான அரசியலமைப்பு ரீதியான அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஒரு குற்றவியல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் உரிமை என்பது அடிப்படையானது. அவருக்கெதிராக முன் வைக்கப்படவுள்ள வழக்கையும் சாட்சியங்களையும் முழுமையாகக் கேட்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் அவருக்குப் பூரண உரிமை உள்ளது.

இவ்வாறாக வழக்கு இடம் மாற்றப்படுவதானது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தனது விருப்பத்தின் அடிப்படையில் சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மறுக்கப்படுகின்ற அதேவேளை, இது உள்ளடங்கலான ஏனைய அம்சங்களும் நீதியான ஒரு விசாரணை இடம்பெறுவதனை மறுதலிப்பதாக அமையும். முன்மொழியப்பட்டுள்ள இந்த வழக்கு இடமாற்றமானது குற்றஞ்சாட்டப்பட்ட நபரது அடிப்படை உரிமை சம்பந்தமாக எந்தவொரு அவதானிப்பையும் கருத்திற் கொள்ளவில்லை என்பதையே பிரதிபலிக்கின்றது. குறித்த இடமாற்றத்திற்கு எதிராக கைதிகள் தொடர்ச்சியாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த நிலைமையானது அவசரமான அடிப்படையில் கையாளப்பட வேண்டியதாகும்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கைதிகள் எவ்வித தாமதமுமின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்பதை நான் மிக ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றேன் என அந்தப் பிரேரணையில் சம்பந்தன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-9)

## மக்களை கோமாளி...

துள்ளார். கந்தர்மடம் மணல்தறை வீதியல் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தின் போது அடுத்த தீபாவளி பண்டிகை தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான சூழலாக இருக்கும் என உரையாற்றியிருந்தார். இது போன்று தான் முன்னரும் ஒரு வருடத்திற்குள் தீர்வு என்றார். இவ்வாறு சம்பந்தன் தமிழ் மக்களை ஏமாற்றும் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு நேரம் ஒவ்வொன்றை செய்வதால் சம்பந்தனை யாரும் கோமாளிகள் என நினைத்து விடகூடாது. அவர் தமிழ் மக்களைதான் கோமாளிகளாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். தான் எதனை சொன்னாலும் இந்த மக்கள் அதனை நம்புவார்கள் என நினைத்து கொண்டு தான் இவ்வாறு எல்லாம் அவரால் பேசமுடிகின்றது. இதனை தமிழ் மக்கள் உணராவிட்டால் அதன் விளைவுகளை மக்களே அனுபவிக்க வேண்டும் என்றார். (ம-4)

## வாக்குமூலம்...

விளக்கமளிப்பதற்காக மட்டுமல்ல பிரதிவாதியாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பிணை முறிப்பத்திர விவகாரத்தில் பிரதமருக்கு தொடர்பு இருப்பதாக நான் தொடர்ந்தும் கூறி வந்தேன். தற்போது அது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரதமரை உடனடியாக அழைத்து இது குறித்து வாக்குமூலம் பெற வேண்டும்.

பிணை முறிபத்திர மோசடி தொடர்பாக கோப்குழுவின் அறிக்கைக்கு முரணாக கருத்து வெளியிட்டு பிரதமர் நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்தியதாகவும் இது சம்பந்தமாகவும் பிரதமர் நேரடியாக கருத்தை வெளியிட வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (மு)

## டெங்கு சோதனை...

படுகிறது. அந்த வகையில் சுகாதார பிரிவினர், முப்படையினர், பொலிஸார் உட்பட்ட குழுவினார் இந்த செயற்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்.குடாநாடு முழுவதிலும் உள்ள 9 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மேற்குறித்த செயற்திட்டம் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. நேற்றைய தினம் மட்டும் வீடுகள், பாடசாலைகள், திணைக் களங்கள் உள்ளிட்ட 6 ஆயிரத்து 407 இடங்கள் சோதனை செய்யப்பட்டது.

அவற்றுள் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழல் இருப்பதாக 2065 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளது. குடம்பிகள் இருப்பதாக 162 இடங்களும் இனங்காணப்பட்டதுடன், உடனடியாக திருத்தம் மற்றும் சுத்தம் செய்யவேண்டிய பகுதிகளாக 653 இடங்கள் இனங்காணப்பட்டதுடன் அவற்றுக்கு அறிவித்தல் பிரசுரங்களும் வழங்கப்பட்டது.

மேலும் அதிகூடிய அளவிலான டெங்கு பெருக்கத்துக்கு காரணமாக சுற்றுச்சூழலை வைத்திருந்த 104 பேருக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட செயற்திட்டம் இன்றைய தினமும் முன்னெடுக்கப்படும் என சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர். (ம-9)

## தமிழ் அரசியல்...

அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகள் 22ஆவது நாளாக தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டில் வெவ்வேறு காலப் பகுதியில் வவுனியாவில் கைது செய்யப்பட்ட மதியரசன் சுலக்சன், கணேசன் தர்சன் மற்றும் இராசதுரை திருவருள் ஆகியோரே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அநுராதபுரம் விசேட மேல்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ள தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேசங்களுக்கு மாற்றுமாறு வலியுறுத்தி இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)

## முதலமைச்சர்...

சந்தித்து வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட வருமாறு அழைப்பு விடுத்ததாகவும் எனினும் அவர் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை எனவும் தெரிய வருகிறது.

இது இவ்வாறு இருக்க வடக்கின் அடுத்த முதலமைச்சராகவும் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனே வர வேண்டும் என வடபுலத்து மக்கள் விரும்புவதாகவும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு இடம்கொடுக்கத் தவறும் பட்சத்தில் அது கூட்டமைப்புக்கு மிகப் பெரும் சவாலாக இருக்கும் எனவும் அரசியல் அவதானிகள் கருத்துரைத்துள்ளனர்.(ம)

## யாழ்.பல்கலை...

நிலை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில் தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு கைதிகளின் உறவினர்கள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் வடமாகாண ஆளுநர் ஊடாக கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்த நிலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் சிறையில் போராட்டத்தை தொடர்ந்துள்ள கைதிகளை அவர்களது உறவுகள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர். (ம-9)

## தனிநாடு அமை...

இருந்திருக்கும் என பிரபல தமிழ் திரைப்பட இயக்குநர் பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தமிழ் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

நான்கு பேரை 400 ஆகவும் 4000 ஆகவும் மாற்றிய மிக பிரம்மாண்டமான போராளி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

விடுதலைப் புலிகளின் தலைவருக்கு என்மீது அளவுகடந்த அன்பு. எமது பிரச்சினைகளை மையமாக வைத்து ஒரு படம் எடுக்க வேண்டும் என்று தன்னிடம் கேட்டுக் கொண்டதாகவும் பாரதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

எனக்கு மிகவும் பிடித்த, எனது மனதை கவர்ந்த தலைவர் பிரபாகரன் எனவும் பாரதி ராஜா புகழாரம் சூட்டியுள்ளார். (ம)

## புதிய அரசியல் அமைப்பு...

இரண்டு மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு எதையோ பெற்று தர போவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரசாரம் மேற்கொண்டு வருகின்றது. 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் தேர்தல்களின் போது மிக தெளிவாக தமது ஆணையை வழங்கி வருகின்றனர். அன்றிலிருந்து இன்றுவரை ஒற்றையாட்சியை நிராகரித்தும், வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்த்தேசம் அங்கீகரிக்கப்பட்ட இறைமையின் அடிப்படையில் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி தீர்வுக்கும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 2015இல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இவற்றை முன்னிலைப்படுத்தியே தேர்தலில் போட்டியிட்டது. ஆனால் தற்போதையை அரசியலமைப்பு 1956ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் எதிர்பார்த்து வரும் அபிலாசைகளை நிறைவேற்றுமா என்பது கேள்விக்குறியே. ஆனால் ஈழத்தமிழ் சரித்திரத்தில் முதல் தடவையாக சிங்கள பௌத்த மேலாதிக்க யோசனைகளை தற்போதுள்ள தமிழ் தலைமை ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் புதிய அரசியலமைப்பை பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை அனைவருக்கும் உண்டு. புதிய அரசியலமைப்பில் ஆங்கிலத்தில் ஒற்றையாட்சி [unitary state] என்ற சொற்பதம் இலங்கைக்கு பொருத்தமற்றது என கூறப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் இந்த ஆட்சிமுறை உள்ள நிலையில் அங்கு ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று இலங்கையில் நடந்து விட கூடாது என்பதற்காக தான் சிங்களத்தில் ஏக்கிய இராஜ்ய என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்தியுள்ளார்கள்.

இதன்மூலம் தெளிவாக தெரிகின்றது வரபோவது ஒற்றையாட்சியே என்பது. இலங்கையில் இதுவரை காலமும் இருந்த ஒற்றையாட்சி அரசியலமைப்பை விட மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி அரசியலமைப்பாக புதிய அரசியலமைப்பு இருக்க போகின்றது. புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களுடைய இறைமை அங்கீகரிக்கப்பட்டு விட்டது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறி வருவது அப்பட்டமான பொய்யாகும். இறைமையானது இனங்களுக்குடையில் பிரித்து பார்க்கப்பட முடியாது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே தமிழர்களுக்கு என இறைமை அங்கீகரிக்கப்படவில்லை. கூட்டு இறைமையை தான் புதிய அரசியலமைப்பு வரையறை செய்துள்ளது. அடுத்து புதிய அரசியலமைப்பில் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு இணைப்புக்கான வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. ஆனாலும் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பிலேயே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனினும் வடக்கு கிழக்கு இணைப்பை நாங்கள் விரும்பினாலும் அதனை சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட பாராளுமன்றமே முடிவு செய்யும். இது தொடர்பிலும் கூட்டமைப்பு பொய் பரப்புரைகளையே மேற்கொண்டு வருகின்றது.

அடுத்து பௌத்தத்திற்கு முன்னுரிமை என்பதையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த விடயத்தில் பேச்சுக்கு கூட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்த அங்கீகாரம் தமிழர் தாயகத்தில் மேலும் பௌத்தமயமாக்கல் தீவிரமடைவதற்கும் வழிவகுக்கும். இரண்டாம் சபை என்பது கூட மத்தியால் அதிகாரங்கள் பறிக்கப்படுவதை தடுக்க முடியாது. தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக கோரி வந்த சமஷ்டி இதுவல்ல.

ஆகவே இந்த அரசியலமைப்பிற்கு ஆதரவு கோருகின்ற அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் தனி நபர்கள் தமிழ்த்தேச துரோகிகளாகவே பார்க்கப்பட வேண்டும். என்றார் கஜேந்திரகுமார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு காய்ச்ச...

படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி டெங்கு ஒழிப்பு செயலணியின ஆலோசனை பிரகாரம் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 854 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

அதில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 390 பேர் உயிரிழந்துள்ளனர்.(ம)


Mobile Phone Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking
14th Batch start on 4.11.2017
Weekend Batches
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 . 021-7306000


## முதலமைச்சருக்கு...

ன்றத் தலைவர் நீதியரசர் தெஹிதெனிய மற்றும் நீதியரசர் அமரசேகர முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கடற்றொழில் கிராமிய போக்குவரத்து அமைச்சின் அமைச்சு பொறுப்பிலிருந்து தனது சம்பந்தம் இன்றி தன்னை நீக்குவதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என கூறி முதலமைச்சர் நீதியரசர் என்றால் தான் சட்டத்தரணி. இதனை எவ்வாறு கையாள வேண்டும் என எனக்கு தெரியும் என சவால் விடுத்து முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரனின் தீர்மானத்திற்கு எதிராக வடக்கு மாகாண கடற்றொழில் கிராமிய போக்குவரத்து முன்னாள் அமைச்சர் ப.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைகள் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதல் நடைபெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் தெஹிதெனிய, நீதியரசர் அமரசேகரவினாலும் வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

வழக்கை நடத்தக் கூடிய சட்ட ரீதியான காரணங்கள் எதுவுமே இல்லாதபடியினால் முதலமைச்சருக்கு அறிவித்தல் கொடுக்காமலே செலவுடன் வழக்கு முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னான்டோவும், முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிடெல் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் முதலமைச்சர் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஜெயக்குமாருடன் ஜனாதிபதி சட்டத்தரணி திரு.கனகஈஸ்வரன் தோன்றியிருந்தனர்.

இந்த நிலையிலேயே அமைச்சரை நியமிப்பதற்கான அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு என டெனீஸ்வரன் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அமைச்சர்களை நியமிப்பது ஆளுநருக்கே உரித்தான அதிகாரம் என்றும் முதலமைச்சருக்கு அந்த அதிகாரம இல்லை என்றும் டெனீஸ்வரன் சார்பிலும் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம் சார்பிலும அவர்களுடைய சட்டத்தரணிகள் கருத்து தெரிவித்திருந்தமை எல்லோரும் அறிந்ததே. அந்த வாதம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இந்த வழக்கில் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-4-250)


வனபரிபாலன திணைக்கள போட்டிப் பரீட்சை விசேட வகுப்பு
செவ்வாய் (இன்று) பி.ப 2.00-5.00
வியாழன் (19.10)
வெள்ளி (20.10)
காலை 9.00-3.00
■ தொழில்நுட்ப அறிவு
■ பொதுஉளச்சார்பு
DMI
வெலிங்டன்சந்தி (Honda காட்சியறை எதிரே)
076 688 3394

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்

UK - 550/=
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)
(C-9989)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

நெல்லியடியில் தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
குழந்தைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், கர்ப்பிணிப் பெண்களுக்கான வைத்தியசாலைப் பொருட்கள், குழந்தைகளுக்கான தொட்டில்கள், வோக்கர்ஸ், ரிச்சாட் கார், பைக் என்பன தீபாவளியை முன்னிட்டு (17,18 ஆம் திகதிகளில்) அனைத்து பொருட்களையும் 50% விலைக் கழிவுகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.


ஏசியன் பேபி நீட்ஸ்
66/1 பிரதான வீதி, நெல்லியடி

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
0768226243
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.

(C-9989)
மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

குஜராத், அகமதாபாத், நேப்பாள், காசி யாத்திரை
நாட்கள்: 16 ஆரம்பம்: 25.11.2017 யாத்திரீகர்: 20
மிகவும் புனிதமான யாத்திரை
செல்லுமிடங்கள்: **குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்), காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம், 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம். **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம், **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம், **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி திருவேணி சங்கமம், வேறு இடங்களும் காணலாம், சீத்தாமடியும் காணலாம். **நேப்பாள்:** கோராப்பூர், லும்பினி, புத்தபிரான் பிறந்த இடம். **காத்மாண்டு:** கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெல்நாராயணர், தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை - இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோசமங்கை, **மதுரை:** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.
தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாயிற்கு எமது சேவை
விமானப்பயணச்சீட்டு, மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A.C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம்.
கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் பாஸ்போட்டின் படமுள்ள பக்கம் ஒரு போட்டோ கொப்பியும், ஒரு கலர் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். (விபரங்களை கேட்டு அறியவும்) பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம்.
விஸ்வப்பிரம்மஸ்ரீ.
T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
கைபேசி: 0777680102, 0777562154
(C-024)

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவன் சாதனை

செல்வன் தமிழ்பிரியன்
எமது இல்லத்தில் தங்கியிருந்து கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயின்று 2017-ம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் தமிழ்பிரியன் அவர்கள் எமது இல்லத்திற்கு பெருமை சேர்த்துள்ளதுடன் தொடர்ந்தும் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டியுள்ளார். இவருக்கு எமது இதயபூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் இவரது முயற்சிக்கு என்றும் தலைசாய்க்கின்றோம். இவருக்கு ஊக்கமளித்த இல்லப் பொறுப்பாளர் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.
தலைவர் தி.இராசநாயகம் அவர்கள்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
இல்லக்குழந்தைகள்.
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
(கி-034)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.